சத்தியம்
தர்மம்
சாந்தி
பிரேமை
அகிம்சை

CHUNNAKAM SAI LITERATURE LIBRARY
OM SAI RAM
SAI PATHA MANDIR CHUNNAKAM.

ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

சாயி இளைஞர்களின் உலக மகாநாடு
யூலை 26,27,28
2007

## விசேட மலர்

ஏப்ரல் – செப்டெம்பர் 2007

இலங்கை
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
**தமிழ் சஞ்சிகை**

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# எது நிலையானது?

சீனத் தத்துவ ஞானி கொன்வூசியஸ் *(Confucious)* இறக்கும் தறுவாயில், பலர் சூழ்ந்து நின்றார்கள். அவர் அப்போது மெதுமையாகச் சொன்னது:

**கொன்வூசியஸ் :** சூழ்ந்திருப்பவர்களைப் பார்த்து, என் வாயில் என்னதென்பதைப் பார்க்க முடியுமா?

**ஏனையோர்:** உங்களின் நாக்கு மாத்திரம் தெரிகிறது.

**கொன்வூசியஸ்:** உங்களின் வாயில் என்ன இருக்கிறது?

**ஏனையோர்:** வாயில் நாக்கும் பல்லும் இருக்கிறது.

**கொன்வூசியஸ்:** மனிதன் பிறக்கும் பொழுது நாக்குடன் தான் பிறக்கின்றான். பற்கள் பின்பு முளைக்கின்றன. பற்கள் மிகவும் கடினமானவையும், பலமானவை யுமாகும். மனிதன் வயோதிபத்தை அடையும் பொழுது இந்தக் கடினமான பற்கள் ஒன்றன் பின் ஒன்றாக விழுந்துவிடும். மென்மையான நாக்கு மாத்திரமே இறுதிவரை நிலைத்திருக்கும்.

மென்மையானதே இறுதிவரை நிலைக்கும். ஆகவே மென்மையாக இருக்க வேண்டும். அனைவரிடமும் அன்பாகவும், கருணையுடனும் மென்மை யாகவும் பேசவேண்டும். இதுவே என் கடைசி உபதேசம்.

## வாழ்வு ஒரு சின்னக் கோடே

***இடுகாட்டில் ஒரு நினைவுத் தூபியில் 1944 - 2006 என்று பிறந்த ஆண்டும், இறந்த ஆண்டும் குறிக்கப்பட்டன. இரு ஆண்டுகளுக்குமிடையேயுள்ள சிறு கோடுதானே வாழ்வைக் குறிக்கிறது. நாம் எவ்வாறு அன்புடன் வாழுகின்றோம் என்பதெல்லாம் இச் சிறு கோடுதான். இந்தச் சிறிய கோடும் நெடு நாட்களுக்கு நிலைத்திருக்காது.***

*- சுடலை ஞானம்.*

# சாயி மார்க்கம்
# Sai Markam



| மலர் : 14 | ஒரே ஒரு மதம் | ஏப்பிரல் - செப்டம்பர் |
|---|---|---|
| இதழ் : 39 | அது அன்பு எனும் மதம் | 2007 |



## பொருளடக்கம்



- அகில உலக சத்திய சாயி இளைஞர் மகாநாடு 2 - 5
- பிரார்த்தனையின் சக்தி 6 - 8
- குரு பூரணை 9 - 13
- மிகப் பெரிதாய் அவரிடம் காணப்படுவது அன்பு 14 - 17
- வெல்லத்தை நாடியே எறும்புகள் வரும் 18 - 19
- புட்டபத்தி 20 - 20
- இளைஞர்களைப் பற்றி "வேதாந்த கேசரி" 21 - 24
- தன்னம்பிக்கை 25 - 25
- பாலவிகாஷ் பாடத்திட்டத்தின் தத்துவம் 26 - 26
- அன்புத் தெய்வம் சாயிமாதா 27 - 28
- மனிதனும் தெய்வமாகலாம் 29 - 31
- இறைவனிடமிருந்து மனிதனுக்கு என்றைக்குமான செய்திக் கடிதம் 32 - 33
- சத்திய சாயி இளைஞர்களின் மூன்றாவது மகாநாடு 34 - 41
- சேவைச் செய்திகள் வடபிராந்தியம் 42 - 42
- சேவைக்கு பகவானின் அற்புதங்கள் சில 43 - 44



---



**இலங்கை தனிப் பிரதி** **ரூபா 30/-** **(சந்தா அனுப்பும் முகவரி: ஆசிரியருக்கு)**

**வருட சந்தா (4 பிரதிகள்) ரூபா 120/-** **காசோலை:** Sathya Sai Seva Org(NZ)

A/No.**0402301 - 1**

**வெளிநாடு வருட சந்தா** U.S **டொலர் 10** H.N.B, Jaffna.



---



**ஆசிரியர்: வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி**

**தொ.பே: 222 2832 / 2225580**

**இல.659, நாவலர் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

**துணை ஆசிரியர்: திரு.**S.R.**சரவணபவன்**

**தொ.பே: 222 5442**

# அகில உலக சத்தியசாயி இளைஞர் மகாநாடு

பகவானின் போதனைகளைப் படிக்கும் பொழுது, ஆரம்பத்தில் பக்தி யோகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததையும், பின்பு கர்மயோகத்திற்கும், அதன்பின்பு மனித மேம்பாட்டுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததையும் அவதானிக்கலாம். இதனைத் தொடர்ந்து தற்போது இளைஞர்களின் முக்கியத்துவத்திற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கிறார். 1997ம் ஆண்டு சத்தியசாயி நிறுவனத்தில் இளைஞர் பிரிவை அங்குரார்ப்பணம் செய்து அவ்வாண்டு **யூலை மாதம் 16-19ம் திகதிகளில் முதலாவது அகில உலக இளைஞர் மகாநாட்டையும் நடாத்தினார்.**

அம் மகாநாட்டில் 66 நாடுகளிலிருந்து 2000 பிரதிநிதிகளும், இந்தியாவிலிருந்து 10,000 இளைஞர்களும் பங்குபற்றினர். அந்த மகாநாட்டின் மையவாக்கியம் **"தர்மத்தைக் கடைப்பிடித்தல்"** என்பதாகும். அந்த நான்கு நாட்களிலும் சுவாமி அருளுரைகள் நிகழ்த்தினார். அவற்றிலிருந்து சில குறிப்புகள் :-

உலகத்தின் சௌபாக்கியம், ஆரோக்கியம் இளைஞர்களின் நடத்தையிலேயே தங்கியுள்ளது. உடல் எடுத்தது சேவை செய்தற்கே, பாபத்திற்கு அஞ்சவேண்டும். இறைவனிடம் அன்பு கொள்ள வேண்டும். அச்சமின்றி வாழ வேண்டும். கடவுள் கிருபைக்கே ஆசை கொள்ள வேண்டும். எப்போதும் இறைநாமத்தையே ஜெபித்துக் கொள்ள வேண்டும்.

முன்னைய காலத்தில் சகலரும் தியாக மனப்பாங்கு கொண்டிருந்தார்கள். தற்கால இளைஞர்களிடம் தன்னலம், அவா, பொறாமை, வெறுப்பு மேலோங்கியுள்ளது. இருதயமே ஆசிரியர், காலமே போதகர், உலகமே ஆன்மீகப் புத்தகம், இறைவனே அளப்பரிய நண்பன் என்பவற்றில் நம்பிக்கை வைத்து வாழவேண்டும். ஒருவன் தன்னிடம் உள்ள குறைபாடுகளில் கவனம் செலுத்த வேண்டும். இறைவனுக்கு அருகாமையில் சேர்ந்தால் மனித நிலையிலிருந்து இறை நிலைக்கு உயர்த்தப்படலாம். எதைத்தான் செய்யாவிட்டாலும் தெய்வீக அன்பை விருத்தி செய்யவும் ஆண்டவரே சகலதையும் நெறிப்படுத்துபவர். மனிதர்கள் எல்லோரும் நடிகர்களேயாவர். ஆண்டவன் அளித்த நடிப்புப்பங்கை திறமையாகச் செய்ய வேண்டும். இதற்குப் பயிற்சியளிக்கவே இம் மகாநாடு கூடப்பட்டது. அச்சம் நம்பிக்கையின்மை, முரண்பாடு நிறைந்த உலகில் **இளைஞர்கள் அன்பு, சாந்தி, சத்தியமே சொரூபமாகிய இறைவனின் தூதர்களாக திகழ வேண்டும்.**

உங்கள் சுயதன்மை தெய்வீகமான தென்பதை உலகுக்குக்காட்டி மக்கள் அனைவரும் தமக்குள்ளிருக்கும் இறைத்தன்மையை உணர வைக்க வேண்டும்.

உங்களுடைய உணவும், பழக்கவழக்கங்களுமே உங்களில் சிந்தனையை எழுப்புகின்றன. எண்ணங்களில் கெட்டதையும், நல்லதையும் பாகுபடுத்தத் தெரியவேண்டும். இதற்குப் புத்தக அறிவிலும் பார்க்க அனுபவ அறிவே சிறந்தது. எண்ணம், சொல், செயலின் ஒருமை இருப்பதே மனிதனின் உன்னத வளர்ச்சியின் சிகரம். சிந்தனைகள் யாவும் வெளி உலகின் பிரதிபலிப்பேயாகும். இறைவனையே ஆதாரமாகக் கொண்டால் செய்யும் செயல்களெல்லாம் மிக மதிப்பைப் பெற்றுக் கொள்ளும்.

சத்தியத்தைக் கடைப்பிடித்து தெய்வீகநிலையை அடைய வேண்டும். சத்தியம் என்றும் மாறாது. சொல்லால் வர்ணிக்க முடியாது. எல்லாவற்றிற்கும் ஆதாரமனதும் அதுவேயாகும். நாம் எப்போதும் உண்மையைப் பேச வேண்டும். அந்த உண்மை ஆனந்தத்தைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். மற்றவரைத் திருப்திப்படுத்துவதற்காக உண்மையற்றவற்றைப் பேசக்கூடாது.

நேரத்தை வீணடிக்கவேண்டாம். அளவில்லாது பேசுவதாலும், தொலைக்காட்சி, வானொலியை எந்த நேரமும் பார்ப்பதாலும், கேட்பதாலும் நேரத்தை வீணாக்குகிறார்கள். இறை நம்பிக்கை மூலமாகத் தன்னம்பிக்கையை விருத்திசெய்து, பின் சுயதிருப்தியை அடைந்து, தியாக மனப்பாங்கை வளர்த்தால் ஞான நிலையை அடையலாம். உருவமும் அருவமும் ஒன்றேயாகும் நிலையே முக்திநிலை. எல்லோரும், எல்லாமும் ஒன்றே என்ற உணர்வை அடைவதே ஆன்மீகமாகும். மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலமே விடுதலையடையலாம்.

தற்போதய இளைஞர்களுக்கு விபூதி அணியவோ, நகர சங்கீர்த்தனத்தில் பங்குகொள்ளவோ வெட்கமாக இருக்கிறது. சினிமாப் பாட்டைப் பாட ஆசைப்படுகிறார்கள். இறைநாமத்தைப் பாட விரும்புவதில்லை. சத்திய சாயி நிறுவனத்தின் செயற்பாடுகளில் நகர சங்கீர்த்தனம் ஒன்றாகும். இது அதிகாலையில் மனதை அமைதிப்படுத்தியும், சுற்றாடலைத் தூய்மைப்படுத்தவும், பாடுபவரும், கேட்பவரும் இன்புற்று அமைதியுடன் தெய்வச் சிந்தனையில் இருக்கவும் உதவுகிறது. ஒவ்வொரு நாளும் ஒரு மணித்தியாலமாவது தனிமையாக மௌனமாக இருக்கப் பழகவேண்டும்.

பிரசாந்தி நிலையம் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்க்கும் இடம் போன்றது. பழுதுபட்டதைத் திருத்தியும் அல்லது புதியதைப் பூட்டியும் சொந்தக் காரருக்கு திருப்பிக் கொடுப்பது போல, இங்கு வருவபவர்கள் தீய எண்ணங்களையும், செயல்களையும் அகற்றி உன்னதமாக மாறிச் செல்கிறார்கள்.

அவர்களின் உற்றார், உறவினர் அவர்களில் ஏற்பட்ட மனமாற்றத்தை அவதானித்து மகிழ்ச்சியடைகிறார்கள். இங்கு ஏற்படும் உன்னத மாற்றத்தினால் தேசமும் பயனடையும். பெற்றோருக்கும் பிறந்த தேசத்திற்கும் எப்போதும் சேவை செய்ய வேண்டும். பெற்றோர், குரு, விருந்தினரைத் தெய்வமாக மதிக்கவேண்டும். **சுவாமியைப் போல பிறந்த இடத்திற்குத் தொண்டு செய்வதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.**

முன்பு ஒழுக்கமற்றவர்களாக இருந்தாலும் இனிமேல் நல்லவர்களாக புதிய அத்தியாயத்தைத் தொடங்குங்கள். இறந்த காலத்தை மறந்து நிகழ்காலத்தில் கவனத்தைச் செலுத்துங்கள். கவலையடையாது எல்லாம் இறைவனின் அளிப்பேயென்று ஏற்றுக்கொள்ள வேண்டும். உலக நோக்கு எங்கள் உள் மனத்தின் பிரதிபலிப்பே. அகமகிழ்ச்சி, திருப்தி இருந்தால் உலகமும் அப்படியே புலப்படும். இறைசேவையில் ஈடுபடும் போது மற்றவர்களின் பகிடி அல்லது ஏளனக் கூற்றிற்குச் செவிசாய்க்க வேண்டாம்.

உலகில் கோடிக்கணக்கான இளைஞர்கள் இருந்தாலும், இங்கு வந்திருக்கும் சொற்ப எண்ணிக்கையான நீங்கள் தான் இந்த அனுபவத்தைப் பெறும் பாக்கியசாலிகள். எங்கும் எப்போதும் சேவையில் ஈடுபடும் பொழுது சுவாமி உங்களுடன் இருப்பார். எந்தத் தீங்கிலிருந்தும் உங்களைக் காப்பாற்றுவேன். இலாபம், நட்டம் கீர்த்தி அபகீர்த்தியைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம். இடைவிடாது இறை சிந்தனையுடன் செயற்படுங்கள்.

நீங்கள் வீடு திரும்பியதும் இங்கு கேட்டவற்றையும் அனுபவித்ததையும் ஜீரணிக்க வேண்டும். வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டும். **இறை நம்பிக்கையுடன் பன்மையில் ஒருமை என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.** நல்லவர்களாகவும் சமூகத்திற்குச் சேவையாற்றுபவர்களாகவும் இருங்கள். சுவாமி உங்களுக்கு வேண்டியதைத் தருவார். இதுதான் எனது ஒரே ஒரு விருப்பமாகும். இச்செய்தியை மற்றையவர்களுக்கும் பரப்பவேண்டும்.

இரண்டாவது அகில உலக இளைஞர் மகாநாடு நவம்பர் மாதம் 1999ம் ஆண்டு பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்றது. இந்த மகாநாட்டின் மைய வாக்கியம் **"தெய்வப் பணியில் இளைஞரின் பங்கு"** அப்போது பகவான் நிகழ்த்திய அருளுரையிலிருந்து (18.11.1999) சில குறிப்புகள் :-

இளைஞர்கள் உலகை உன்னதமாக்க முயல வேண்டும். நான் என்பதிலிருந்து நாங்கள் என்ற மனப்பாங்கை அடைவதே மனித வாழ்க்கையின் பயணம். உங்கள் பயணம் நீண்டது. ஆசைகள் என்ற பொதிகளே அதிகம். ஆசைப்பொதிகளைக் குறைத்துவிட்டால், பயணம் ஆனந்தமாகவும் சௌகரியமாகவும் இருக்கும். உள்ளிலிக்கும் அன்பு சேவையாகப் பரிணமிக்க வேண்டும். **சேவை அன்பு என்ற பதங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. ஐந்து மனித மேம்பாடுகள் வாழ்வில் பரிணமிக்கும் போது தான் எமது வாழ்வு சுவாமியின் போதனையைப் பிரதிபலிக்கும்.** வெளிப்பார்வையில் தென்படுவதெல்லாம் அகத்தின் பிரதிபலிப்பேயாகும். நன்றும் தீதும் வெளியில் இல்லை. அகத்தின் வெளிப்பாடே. ஆகவே எவரையும் மதிப்பீடு செய்து தீர்ப்பை வழங்க வேண்டாம். **அறம், நீதி, சத்தியம் ஆகியவற்றை யார் கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களே உண்மையில் இளமையானவர்கள். அப்படிப்பட்டவர்களே உங்கள் இதய பூர்வமான சினேகிதரும் எனது இதயபூர்வமான சினேகிதருமாவார்கள்.**

நீங்கள் அன்புடனும் சகோதரத்துவ மனப்பாங்குடனும் வாழ்வதையே விரும்புகிறேன். எனது உடம்பு பிறந்த நாள் தொடக்கம் சேவையிலேயே ஈடுபடுகிறது. நீங்கள் சேவையிலேயே தொடர்ந்து ஈடுபட வேண்டும். இதுதான் எனது செய்தி. நான் செய்வதையே எப்போதும் போதிப்பேன். ஐம்புலனடக்க மின்றி சேவை செய்வதில் அதிக பலனில்லை.

**நீங்கள் என்மேல் வைத்திருக்கும் அன்பும்தான், நான் உங்கள் மேல் வைத்திருக்கும் அன்புமே உங்களை இந்த வைபவத்தில் பங்குகொள்ள வைத்தது.** உங்கள் அன்பு குடும்பத்திற்கும், சுற்றத்தார்க்கும், சினேகிதருக்கும் மட்டுமென்று மட்டுப்படுத்தக்கூடாது. தீயவர்களுடன் சேர வேண்டாம். வாழும் முறையே ஆன்மீகம், ஆன்மீகத்தில் ஒன்றே ஒன்று தான் உள்ளது. அது அன்பு தான்.

**21.5.2006 ல் கேரள இளைஞர்களுக்கு அளித்த அருளுரையிலிருந்து சில குறிப்புகள் :-**

நாம் எல்லோரும் சமூகத்தின் பகுதியாகையால் தன்னலமற்ற சேவையே திறமையான ஆன்மீக சாதனையாகும். மனிதன் இயற்கையாகவே தூய்மையானவனும் பவுத்திரமானவனுமாவான். தீயவர்களுடன் சேர்வதாலேயே தீய குணங்கள் எழுகின்றன. எமது சகல காரியங்களும் சத்தியத்தையும், தர்மத்தையும் கொண்டிருக்கவேண்டும். உங்கள் அன்பு என்னில் பிரதிபலிக்கிறது. எனது அன்பு உங்களில் பிரதிபலிக்கிறது.

**27.5.2006ல் கன்னட இளைஞர்களுக்காக அளித்த பேருரையிலிருந்து சில குறிப்புகள் :-**

மனிதன் சமூகத்தின் பகுதி. சமூகமோ படைப்பின் பகுதி. படைப்போ இறைவனின் பரிணமிப்பின் பகுதி. ஆகவே, சகலரையும் நாம் அன்புடன் அணைத்து மதிப்பளிக்க வேண்டும்.

நாம் எமது செயல்களின் விளைவுகளிலிருந்து தப்ப முடியாது. எமது மகிழ்ச்சியும், துக்கமும் பிறர் தருவதில்லை. எல்லாம் எமது செயலின் பிரதிபலனேயாகும்.

இயந்திரங்களிலும் பார்க்க மந்திரங்களே மேன்மையானவை. இறை நாமமே உண்மையான மந்திரம். அது பரமானந்தத்தையளிக்கும். செயலினாலேயோ வம்சத்தினாலேயோ, செல்வத்தினாலேயோ மரணத்தை ஜெயிக்க முடியாது. தியாகத்தினால் மட்டுமே வெல்ல முடியும். நஞ்சும் கடவுளுக்கு அர்ப்பணித்தால் பிரசாதமாக மாறும்.

இவ்வுலகைச் சரிப்படுத்த இளைஞர்களினால் தான் முடியும். இளைஞர் சக்தி அபாரமானது. மனம் வைத்தால் எதையும் சாதிக்கும் இயல்புள்ளவர்கள்.

மூன்றாவது அகில உலக இளைஞர் மகாநாடு 2007 யூலை மாதம் 26,27,28ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இம் மகாநாட்டின் இணைப்புக்குழு, இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள் கொடுத்துள்ளார்கள். இக் கோட்பாடுகளில் இடைவிடாத நாமஸ்மரணை, உணவுக்கட்டுப்பாடு, பெற்றோரை வணங்குதல் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனைய கோட்பாடுகள் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டவற்றுள் அடங்குகின்றன. இம்மாநாட்டின் முன்னோடியாக தேசிய ரீதியில் இளைஞர்களின் மகாநாடு கூட்டப்பட்டு, விளக்கங்கள் கொடுக்கப்பட்டு, செயற்பாடுகளில் இறங்கும்படி கேட்கப்பட்டது. சுவாமியின் அருளுரையிலிருந்து இளைஞர்களுக்குக் கூறப்பட்டது அனைத்தும் தொகுத்து நூலாக வெளியிட உத்தேசித்துள்ளார்கள். மகாநாட்டின் போது சர்வதேச இசை நிகழ்ச்சி, கண்காட்சி, நாடகங்கள், இளைஞர்களின் கட்டுரைகள் வெளியீடு என்பன நிகழும். இந்த மகாநாட்டின் மைய வாக்கியம் :-

**"இலக்கண சாயி இளைஞர்கள் - சாயி அன்பின் தூதுவர்கள்"**

"IDEAL SAI YOUTH - MESSENGERS OF SAI LOVE"

இலக்கண சாயி இளைஞர்களின் தன்மைகளாவன: தூய்மை, பரிசுத்தம், உற்சாகம், சக்தி, துணிவு என்பவையாகும்.

சாயி அன்பின் தூதுவர்களாக விளங்வேண்டுமெனில் இளைஞர்கள் தெய்வீக உணர்வில் **இடைவிடாதிருந்து தெய்வீகமான நடத்தையிலும் ஈடுபடவேண்டும்.** (இச் சஞ்சிகையின் முன்னைய இதழ்களில் இளைஞர்களுக்கென கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. அவற்றையும் திருப்பிவாசிக்கவும்.)

**உசாத்துணை நூல்கள் :-**

சுவாமியின் அருளுரைகள் :-

16.07.97 - SATHYA SAI SPEAKS VOL. 30
17.07.97 - SATHYA SAI SPEAKS VOL. 30
18.07.97 - SATHYA SAI SPEAKS VOL. 30
19.07.97 - SATHYA SAI SPEAKS VOL. 30
18.11.99 - SATHYA SAI SPEAKS VOL. 32.
21.05.06 - SANATHANA SARATHI Aug.2006
27.05.06 - SANATHANA SARATHI July.2006

சாயிமார்க்கம் - ஜனவரி 2007, யூலை - 2006, அக்டோபர் 2002.

ஜெய் சாயி ராம்

**ஆசிரியர் -**
**07.07.2007**

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# பிரார்த்தனையின் சக்தி

**(1985 ஏப்பிரல் மாத சனாதன சாரதியில் (ஆங்கிலம்) வெளிவந்த கட்டுரையின் மொழிபெயர்ப்பு)**

கடந்த வருடம் (1984) நவம்பர் 23ம் திகதி தன்னுடைய பிறந்தநாள் செய்தியின் போது பகவான் தன்னுடைய பக்தர்களின் நாளாந்த பிரார்த்தனைகளுடன், பிரபஞ்சம் அனைத்தின் நலனுக்காகவும் வேண்டி "லோக சமஸ்தா சுகினோ பவந்து" என்ற பிரார்த்தனையையும் சேர்க்குமாறு கூறினார். "அனைத்து உலகங்களிலும் இன்பம் நிலவுவதாக" என்ற இந்த வேத சுலோகத்தை நாளாந்த பிரார்த்தனைக்கு பகவான் சிபாரிசு செய்தார்.

அனைத்து நாடுகளிலும், ஆதிகால தீர்க்க தரிசிகள் பிரார்த்தனையின் பலனை அறிந்திருந்தார்கள். இப்பொழுது விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றிலேயே பூரண நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டிலிருந்தே, பிரார்த்தனையின் சக்தி, தியானம் ஆகியவற்றை விஞ்ஞான ரீதியாகப் பரிசோதித்து நிரூபிக்க முடியும் என்ற சாட்சியம் கிடைத்திருக்கிறது.

லண்டனிலிருந்து வெளியாகும் காலாண்டு சஞ்சிகை ஒன்றில் திரு.றொன்லெயிங் என்பவர், ஐக்கிய இராச்சியத்தில் ஒரு சிறிய மாநிலமான றோட்தீவில் நடைபெற்ற ஒரு ஆராய்ச்சிபற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் சொல்கிறார் :- ஆதிகாலம் தொட்டு உலகெங்கும் உள்ள மடாலயங்களில், அவை எம்மதத்தைச் சேர்ந்தவை ஆயினும் சரி, மனோசக்தி (அல்லது பிரார்த்தனை) நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். வெகு சிலரே இதன் அனுகூலத்தை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால் உலகம் தற்போதைய நிலையிலும் பார்க்க மிக மோசமான நிலையை அடைந்திருக்கக்கூடும். சிலர் நினைப்பது போல துறவிகள் உலகச் செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்பவர்களல்லர். மிக அவசியமானதும் உபயோகமானதுமான சேவையை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

ஐக்கிய ராச்சியங்களில் மாநிலங்களில் ஒன்றான றோட்தீவில் நடைபெற்ற ஒரு பரிசோதனை இதை உறுதிப்படுத்துகின்றது. இச்சிறிய மாநிலத்தில் வாழ்க்கையின் தன்மையைச் சீர்திருத்தும் பொருட்டு முந்நூறு தொண்டர்களைக் கொண்ட ஒரு குழு தியானத்தில் ஈடுபட்டது. நான்கு பேர்களைக்கொண்ட எழுபத்தைந்து குழுக்களாக அவைகள் பிரிந்து மானிலத்தின் வெவ்வேறு இடங்களுக்குப் பரந்து சென்றனர். 1978 யூன் 12 தொடக்கம் செப்ரெம்பர் 12 வரை ஒவ்வொரு குழுவும் ஒருநாளைக்கு இருமுறை ஒரு மணித்தியாலத்துக்கு ஒரே நேரத்தில் தியானத்தில் ஈடுபட்டது. இதன் பலன் ஆச்சரியப்படத்தக்க வகையில் அமைந்திருந்தது. தற்கொலை 45% வீதி விபத்து 48% குறைந்திருந்தது. மிக உணர்சிகரமான வீழ்ச்சி கொலையில் காணப்பட்டது. 53% அது குறைந்திருந்தது. மொத்த மரணத் தொகை 11% வீழ்ச்சியடைந்தது.

1977ம் ஆண்டிலும் பார்க்க 10% அதிகமான சூரிய ஒ ளி உள்ள நாட்கள் இருந்ததாக தேசிய காலநிலைச் சேவை தெரிவித்தது. இந்தப் பிந்திய புள்ளி விபரம் விசேட அர்த்தமுள்ளதாக ஏற்கவேண்டியதில்லை. காலநிலையில் 10% முன்னேற்றம் காலநிலை மாற்றங்களினால் ஆனதெனக் கொள்ளினும் கொலை, தற்கொலை, வீதி விபத்து ஆகியன 50% விழுக்காட்டைக் காட்டுவது பிரார்த்தனையின் சக்தியே என முடிந்த முடிவாக ஏற்றுக் கொள்ளலாம். இதனால், வைதீக மதங்கள் கடைப்பிடிக்கும் அர்த்தமற்ற, பலனற்ற மீண்டும் மீண்டும் கூறிய கூறல் முறையை நான் சொல்லவில்லை. ஆனால் மிக அனுபவம் வாய்ந்தவர்கள் கூர்ந்த மன ஒருமைப் பாட்டுடன் செய்யும் தியானத்தையே குறிப்பிடுகிறேன்.

இந்த ஆராய்ச்சியின் ஈடுபட்ட திரு வால்டர் சிம்மர்மன் மேற்கண்டவாறு சொல்கிறார் – ''பலன் எவ்வாறிருக்கும் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. மனிதமனதிற்கு அளவிறந்த சக்தி உண்டு என்பதை இப்பரிசோதனை முடிந்த முடிவாகக் காட்டுகிறது. நாட்டின் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆச்சரிய காரணமான நன்மாற்றங்கள் ஏற்பட்டதை இது காட்டுகிறது. இம்மாநிலத்தின் வாழ் முறையை தியானத்தின் மூலமாக மட்டுமே நாம் விருத்தி செய்தோம். ஒரு இனிய இசையை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.''

றோட் தீவின் சுகாதார உதவிப் பணிப்பாளர் திரு.ஜோன் ரியர்ணி சொல்வதைக் கேளுங்கள். ''இந்த விவரங்கள் ஆச்சரியமானவை. இந்த குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு தியானத்தின் தாக்கத்தைத் தவிர வேறு எந்த விளக்கத்தையும் என்னால் நினைக்க முடியவில்லை.

றோட் தீவின் சுகாதாரத் திணைக்களத்தில் தரவு மதிப்பீட்டு அலுவலகத் தலைவர் கலாநிதி அலெக்ஸ் பாகீஸ் சொல்கிறார் ''தியானத்தின் பயனால் ஏற்படும் தளர்வு நிலையினால் சில முக்கிய தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை நான் நன்றாக அறிவேன்'' நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் புள்ளி விவரவியலாளரும் சந்தைப் படுத்தல் பற்றிய பேராசிரியருமாகிய கலாநிதி றொனால்ட் கற்று சொல்கிறார். ''புள்ளி விவரவியலாளன் என்ற முறையில் நான் மிகவும் கவரப்பட்டுள்ளேன். மாநிலத்தில் கொலை, தற்கொலை வீதிவிபத்து என்பவற்றில் ஏற்பட்டுள்ள ஆச்சரியகரமான வீழ்ச்சிக்கும் றோட் தீவில் நடந்த பரீட்சார்த்த தியானத்திற்குமிடையே தொடர்பு உண்டென்பது நிச்சயமாகத் தெரிகிறது. நான் ஒரு விஞ்ஞானி என்ற முறையில் தான் பேசுகிறேன். தியானத்தில் அதீத அக்கறை உள்ளவனாக அல்ல''.

பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தில் உளவியல் விரிவுரையாளரான கலாநிதி கறிங்ரன் சொல்வதையும் இறுதியாகக் கேட்போம். ''தியானம் மக்களிடையே அதீத அமைதித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தியானத்தினால் ஏற்படும் சக்தி அளவிறந்தது. அதனால் அது ஏற்படுத்தும் அமைதியும் மென்மையான உணர்வுகளும் மற்றையோரிடமும் தொற்றிக் கொள்கிறது. வைத்தியர்களும் இப்போது இதை முக்கியமானதாகக் கருதுகிறார்கள்''.

தற்கால அமெரிக்காவில் முதல் முறையாக விஞ்ஞான அடிப்படையில் இப்படியான ஒரு பரிசோதனை நடந்திருக்கிறது. நல்லெண்ணமுடைய ஆண், பெண் பாலாரிடையே தங்களுடைய

தியானத்தினால் ஏற்படும் மனோசக்தியை நன்மையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது தூண்டுகோலாக அமைய வேண்டும். இந்த முந்நூறு பேரையும் வழிகாட்டியாகக் கொண்டு உலகிலே உள்ள நாநூறு கோடி மக்களும் பின்பற்ற முடியுமானால் ஏற்படக்கூடிய நன்மையினைக் கற்பனை செய்து பாருங்கள். துன்பமே சூழ்ந்த எங்கள் உலகத்தை அரைநூற்றாண்டு காலத்தினுள் ஒரு சொர்க்க பூமியாக மாற்ற முடியும். உள்ளொளியை எங்கும் பரப்பமுயன்று போதிய பலனைப் பெறாததினால் வாடும் "வழி காட்டும் தீபம்" களாகத் திகழும் சிறிய குழுவினருக்கு இப்பரிசோதனை உற்சாகமூட்டுவதாக அமைய வேண்டும். "எங்களிற் பலர் நினைப்பதைப் போலல்லாமல் இப்படி யானவர்கள் உலகெங்கும் வாழ்கின்றார்கள்".

இருள் சூழ்ந்து, தீய செய்திகளும், எதிர்மறையான எண்ணங்களும் அதிகரித்துள்ள இவ்வேளையில் உள்ளொளி பரப்பவேண்டியதன் அவசியத்தை சமீபத்தில் சாயிபாபா உறுதிப்படுத்தியுள்ளார். இதன் அவசியத்தை அதிகம் வற்புறுத்திச் சொல்லவேண்டியதில்லை. வயோதிபர்களும் நகரமுடியாதவர்களும் கூட இதை அப்பியசிக்க முடியும்".

*சனாதன சாரதி (ஆங்கிலம்)*
*ஏப்பிரல் 1985.*

*( குறிப்பு :- இந்தக் கட்டுரையின் அடிப்படையிலேதான் வடபிராந்தியசாயி நிறுவனங்களால் 1993முதல் மேற்கொள்ளப்பட்டுவரும் 45நாள் சாதனை (அக்டோபர் 9 முதல் நவம்பர் 22 வரை) வடிவமைக்கப்பட்டது. இன்றும் கொலை, களவு, மற்றும் பல சமூக விரோதச் செயல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆகவே ஆன்மீகத்தில் நாட்டம் உடைய அனைவரும் இணைந்து செயலாற்றக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பம் உண்டு. இக்கட்டுரையின் அடிப்படையில் ஒரே நேரத்தில் ஆன்மீக நாட்டம் உடைய அனைவரும் அவரவர் வீடுகளில் உள்ள பிரார்த்தனை அறைகளில் இருந்து கொண்டு ஆத்மார்த்தமாக இணைந்து ஒருமைத் தன்மையை உணர்ந்து நாட்டில் சாந்தி, அமைதி, அன்பு நிலவவேண்டிப் பிரார்த்தனை செய்யலாம். தினசரி மாலை 7 மணிக்கு அனைவரும் பிரார்த்தனை செய்யலாம். தினசரி மாலை 7 மணிக்கு அனைவரும் பிரார்த்தனையில் இணைவோமா? ஊரடங்கு உத்தரவுகள், மின்சாரத் தடைகள் ஆகியவற்றை எமது சாதனைக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். )*

*- ஆசிரியர் -*

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# குரு பூரணை

ஒன்றாய் இருந்த வேதத்தை ருக், யசுர், சாமம், அதர்வணம் என்று நான்காக வகுத்துத்தந்து பாமரரும் அதன் கருத்துக்களையும் புரிந்து உய்யுமாறு மகாபாரதத்தையும் அதனுள் ஞானப் பொக்கிஷமான ஸ்ரீமத் பகவத் கீதையையும் அருளித்தந்து, இவ்வளவும் செய்து மனம் அமைதி கொள்ளாதது கண்டு இறைவனையடைய பண்டிதற்கும் பாமரர்க்கும் பக்திமார்க்கம் இன்றியமையாததென்று கண்டு ஸ்ரீமத் பாகவதமாகிய கிருஸ்ணபரமாத்மாவின் லீலைகளின் தொகுப்பையும் நமக்கருளித்தந்த ஆதி குருவாகிய ஸ்ரீ வியாச மகாமுனிவருடைய மகிமை சரித்திரத்திலே முதல் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் வருகின்ற பௌர்ணமி தினத்தை குரு பௌர்ணமி (வியாச பௌர்ணமி) அல்லது குரு பூரணை என கொண்டாடப்பட்டுவருகிறது. வியாச பகவான் ஆன்மீக சரித்திரத்திலே முதல் குருவாக தோன்றினார். அவருக்கு வெகு காலங்களுக்குப் பின் வந்தவர்களே ஆதி சங்கரர் போன்ற பெரியோர்கள். வியாச பகவானுடைய மகிமையை ஞானிகளே அறிய வல்லார்.

நாம் எல்லையில்லாத ஞானப் பொக்கிஷத்தைப் பெற்று சுகமாக வாழ்கிறோம். எப்போதும் நன்றியுணர்வுடன் நினைக்க வேண்டிய ஒருவரை நாம் அவருடைய தினமாகிய குருபூரணையில் எல்லோரும் கூடி அவர் மகிமைகளைப் பேசி நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதே. அங்ஙனம் செய்வதால் அவர் வழியைப் பின்பற்றவும் அவர் போதனையின் படி நடந்து கடைத்தேறவும் நமக்கு ஊக்கம் பிறக்குமல்லவா?.

நாம் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவை குருவாக ஏற்று வழிபட்டு வருகிறோம். அவர் அவதார புருஷர். அவர் கடவுள் எல்லாம் வல்லவர். எல்லாம் அறிபவர். எங்கும் நிறைந்தவர். சத்திய சொருபமானவர். ஆனந்த சொரூபமானவர். கருணமூர்த்தி இத்தன்மைகளின் மகிமைகளைப்பற்றி அறிந்தவர்கள் குருவைப் போற்றி வணங்குகிறார்கள்.

குரு – என்பதன் கருத்து கு – இருள், ரு – நீக்குபவர்.

நான் என்ற (தோற்ற) அறியாமை இருளை நீக்குபவர். குரு என்பதற்கு இன்னுமொரு கருத்து உள்ளது. அதாவது கு – குணத்தைக் கடந்த நிலை, ரு – உருவைக் கடந்த நிலை.

குணத்தையும் உருவத்தையும் கடந்த நிலையை எவர் அளிப்பாரோ அவரே குரு எனக் கூறப்படுகிறார். அப்படியானால் குரு எப்படி நம்மைத் தெய்வமாக்குகிறார். நாம் மனிதர் தானே, நாம் எப்படித் தெய்வமாவது? நமக்கு ஓர் அற்ப சரீரம். சிறிதாய் இருந்து வளர்ந்து சிலகாலம் நின்று, தேய்ந்து அழிந்து போகிறது. இதில் தெய்வமாக்க என்ன இருக்கிறது? அழிந்து போகும் பொருள் தெய்வமாகுமா? தெய்வமோ எங்குமாய், என்றுமாய், எல்லாமாய் நீக்கமற்று நிற்கிறது. இதை எப்படி எட்டுவது?

குருவானவர்கள் யாவருள்ளும் அவர்களில் எவருள்ளும் மிக உன்னதமான அதி கருணாமூர்த்தமான ஒரு குரு மனிதனுக்குக் கிடைத்துள்ளது. அவர் இறைவனின் திரு அவதாரமேயன்றி வேறெவருமில்லை. துருவனுக்கு விமோசனமளித்ததும், கஜேந்திரரனைக் காத்ததும், குசேலரை

மீட்டதும், பிரகலாதனுடன் கூட இருந்ததுமான அதே கருணமூர்த்தமானது, ''கதியற்றவர்கட்கு புகலாகவும், சர்வேஸ்வரனாகவும், சச்சிதானத்தமூர்த்தியும் அரசர்கட்கு அரசனான புட்டப்பர்த்தி சத்தியசாயி சக்கரவர்த்தியாய் இவ்வுலகில் அவதரித்துள்ளேன். கடவுளிடம் இட்டுச் செல்லும் புராதனப் பாதையை (சனாதன தர்மம்) செப்பனிடவே நான்வந்துள்ளேன். உறுதியாக என்னிடமிருந்து அருளைக் கோருங்கள். உங்கள் இதயங்களைச் சுத்தம் செய்து தூய்மையாக்கி எனது அன்பை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்''.

**இப்படியும் ஒரு அன்பை இப்படியொரு துணையை இப்படியொரு உறுதியை இப்படியொரு குரு அவதார கருணா மூர்த்தியை கண்டு கொண்டோமே! பேரானந்தத்தை, பிரபஞ்சத்தில், அறியாமையென்ற சேற்று சக்தியில் மூழ்ந்து தொலைந்துவிட்ட எம்மை மீட்க வந்திருக்கிறாரே. அதை அறிந்த நாம் எப்படி எம்மைத் தயார் செய்வது? என்னவழி? என்று சிந்திக்கும் போது வழியையும் அவரே காட்டுகிறார்.**

**பகவானின் கீதைப் பேருரைகளில்....**

என்னிடம் முழுமையாகச் சரணடைவோர்களும் என்னையே புகலிடமாகக் கருதுபவர்களும் என்னால் காப்பாற்றப்படுவர். அவர்களது பாபம் அனைத்தையும் பஸ்பமாக்கி இறைவனை உணர்வதற்கு அவர்களுக்கு வழி காட்டுவேன். ஆன்மீகப் பாதையில் உறுதியுடன் முன்னேறும் சாதகர்கள் என்ற முறையில் நீங்கள் இந்த அறிவிப்பை உங்கள் இதயத்தில் புதையலைப் போல் காப்பாற்றி முழுமையான சரணாகதி அதாவது "நான்" என்ற தோற்ற உணர்வோ "எனது" என்ற உடமை உணர்வோ அற்று எல்லாம் நீயே என்ற உறுதியுடன் இறைவனை நோக்கி செயலாற்ற வேண்டும்.

இதைவிளக்க பகவான் கூறியிருக்கும் ஒரு கதை :-

ஒருமுறை பகவான் கிருஸ்ணரும் அருச்சுனனும் ஓய்வுக்காக மாலைநேரம் உலாவப் போயிருந்த போது பகவான் அருச்சுனனைப் பார்த்து அருச்சுனா! அதோ அந்த மரத்தில் இருப்பது புறாவா? பருந்தா? சரியாகத் தெரியவில்லையே... ஆமாம் அது பருந்துதான். என்ன? என்று கேட்டார். அதற்கு அருச்சுனன். ஆம் கிருஸ்ணா அது பருந்து தான் என்று சொன்னார். மீண்டும் கிருஸ்ணர் அருச்சுனனைப் பார்த்து.. இல்லை அருச்சுனா அது காகம் போல இருக்கிறதே என்று கேட்டார். அதற்கு அருச்சுனன் ஆமாம் கிருஸ்ணா அது காகம் தான் என்றார். உடனே கிருஸ்ணர் அருச்சுணனைப் பார்த்து நீ என்ன எல்லாவற்றுக்கும் ஆமா போடுகிறாயே உனக்கு புத்தியில்லையா என்று கேட்டார். அதற்கு அருச்சுனன் கிருஸ்ணா! எனக்கு இந்த காட்சிகளில் நம்பிக்கை இல்லை. உன்னுடைய சொல்லுத்தான் எனக்கு சத்திய வாக்கு. இந்தக் காட்சிகள் எல்லாவற்றையும் நீ மாற்றி விடுவாய். எனக்கு என்று ஒரு புத்தி இல்லை. என்னுடைய மனம், புத்தியை உன்னிடம் அர்ப்பணித்துவிட்டேன் கிருஸ்ணா. எனக்கு எல்லாமே நீதான் என்று அடக்கத்தோடு வணங்கி நின்றான்.

தர்ம யுத்தத்திற்காகப் போர்க்களம் வந்த அருச்சுனன் எதிரணியில் நின்ற தன் உறவினர்களையும் மேன்மை பொருந்திய பெரியோர்களையும் கொல்வதிலும் இவ்வுலகில் பிச்சை ஏற்று உண்பது சாலச்சிறந்தது. நாம் இவர்களை ஜெயித்து அல்லது இவர்கள் நம்மை ஜெயிப்பது இதில் நமக்கு எது மேலானது என்பது விழங்கவில்லை. எவரைக் கொன்ற பின் நாம் உயிர்வாழ விரும்பமாட்டோமோ அத்தகைய திருதராஸ்ட கூட்டத்தார் எதிரில் வந்து நிற்கின்றனர். சிறுமை என்ற கோட்டினால் நல் இயல்பை இழந்த நான் அறநெறியை அறியப்பெறாது மயங்கி உம்மை

வினவுகிறேன். எனக்கு சிறப்பீனுவதை உறுதியாக இயம்பும். நான் உமது சிஸ்யன் தஞ்சமடைகிறேன். உபதேசித்தருளும் என்று அர்ச்சுனன் போர்க்களத்தில் தனது தேர் சாரதியாக வந்த பகவான் கிருஸ்ணபரமாத்மாவை சரணடைகிறான். அந்த கணத்தில் குரு சிஸ்ய உறவு ஏற்படுகிறது. கீதை உபதேசம் கிட்டுகிறது.

**பகவான் தமது கீதா வாஹினியில்**

உண்மையான குரு என்பவர் யார்? மருளை நீக்கும் வழியை அருள்பவரே குரு. யார் உண்மையான சீடன்? வெளியே பாயும் மனத்தை வளைத்து வெல்லுபவனே சீடன். எவ்வளவு சிக்கலான நேரத்திலும் வளைந்து வெல்லுபவனே சீடன். எவ்வளவு சிக்கலான நேரத்திலும் அவன் கண்ணனுடைய கட்டளையை மேற்கொண்டான். கண்ணனுடைய பேச்சைக் கேட்டு நடந்தான். ஆபத்தில் இருந்து காக்கும் கவசம் போல, தான் வாழும் உடம்பைப் போல தான் காவல் செய்து வலுவூட்டி வளர்க்க வேண்டிய ஒன்றாக, அருச்சுனன் கண்ணனிடத்தில் தனக்குள்ள நட்பை அமைத்துக் கொண்டான். ஒரு பெரிய ஆற்றல் படைத்தவன் என்றாலும் தேவைப்பட்டால் கண்ணன் முன்னால் தூக்கி எறிந்துவிட அவன் தயாராக இருந்தான். மேலும் பகவான்..... அர்ச்சுனா ஆத்ம மெய்யறிவைப் பெறுவதற்கான வழியினைப் பற்றி நீ என்னைக் கேட்கலாம். குருவின் கட்டளை கேட்டு கீழ்ப்பணிந்து பரிவுடன் பணி செய்வதன் மூலம் அவரை மகிழ்வித்து அவரது அருளைப் பெற முயல வேண்டும். அவருடைய நன்மையும் மகிழ்ச்சியும் தவிர வேறொரு எண்ணமும் உங்களுக்கு இருக்கக் கூடாது. மற்றதெல்லாம் விட்டு விட்டு அவரது பேரருளைப் பெறுங்கள். அப்பொழுது மெய்யறிவு உங்கள் சொத்தாகி விடும். மாறாக ஆணவத்தாலும், நம்பிக்கையின்மையாலும் நீங்கள் பணிவின்றிக் குருவிடத்தில் குற்றம் காண முயன்றால் சத்தியத்தின் சாட்சி உங்களுக்கு வழங்கப்படமாட்டாது. இருளில் ஆழ்வீர்கள்.

பிரேமையின் வடிவான இறைவன் சீடனின் உளமார்ந்த ஆர்வத்தை உணர்ந்து அவனது திறன்களை மதிப்பிட்டு அதன்பின் மெய்யறிவின் பெருமையையும் நலன்களையும் எடுத்துரைத்தான்.

இந்தப் புனிதமான மெய்யறிவைப் பெறுவதற்கு ஒன்று மிகத்தேவை. அது மெய் நூல்களிலும் ஆசிரியரிடத்திலும் மெய்யறிவைப் பெறுவதிலும் அசையாத நம்பிக்கை. மனவடக்கம், புலனடக்கம், தியாகம், பொறுமை, அமைதி இவை எல்லாவற்றுக்கும் நம்பிக்கை ஒன்றுதான் ஒப்பில்லாப் பெட்டகமாகும். மனதில் ஐயத்தை நுழையவிடாதே என்று பகவான் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

**சாயி அருளமுதத்தில் பகவான், மாணிக்க வாசக சுவாமிகளைப்பற்றி....!**

தமிழ் நாட்டில் பாண்டிய அரசன் மிகப் புகழ் பெற்றவன். அவன் தன் படை பலத்தைப் பெருக்க விரும்பினான். தன் மந்திரியுடன் கூட பலரையும் பணத்துடன் அனுப்பி குதிரைகள் வாங்கி வரப்பணித்தான். ஒரு கிராமத்தருகில் வந்து தங்கினர். திருப்பெரும் துறையில் திருவருளே வடிவெடுத்திருந்த ஞானசாரியர் (குரு) ஒருவரால் ஆட்கொள்ளப் பெற்றார். பரமசிவனே அத்திருக்கோலத்தில் தோன்றி மந்திரியாகச் சென்ற திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகரை ஆட்கொண்டார். குருநாதரும் சிவனடியார் திருக்கூட்டமும் வாத வூரருக்கு அளவில்லாத ஆனந்தத்தை ஊட்டியது. ஆத்ம சாதகன் ஒருவனுக்கு வாய்க்கின்ற வாய்ப்புகளுள் தலை சிறந்தவை இரண்டு. ஒன்று தனது அருள். குருவின் சந்நிதி சார்ந்து அவரோடு சிறிதுகாலம் இணைந்து வாழ்ந்திருப்பது. இரண்டாவது நல்லார் இணக்கம் அல்லது சத்சங்கம். பெறுதற்கு அரிய அவ்விரண்டு அருள்பேறுகளும் வாதவூரருக்கு வேண்டியவாறு வாய்த்தன. குதிரை வாங்க கொண்டு சென்ற பணம் கோயில்

திருப்பணிக்கு பயன்பட்டதால் மாணிக்கவாசகர் சிறையில் அடைக்கப்பட்டார். இளம் மந்திரி அங்கு கடவுள் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். அங்கு பலபாடல்களை இயற்றினார். அவர் பாடிய (திருவாசகம்) பாடல்கள் மக்கள் வேதப்பிரமாணமாக ஏற்றுக் கொண்டனர்.

**கடவுள் பித்துக் கொண்ட ராமகிருஸ்ணரை விவேகானந்தர் சந்தித்தல். அவரது சீடராக மாறுதல்.**

சிற்சில சந்திப்புக்கள் வாழ்க்கையினையே மாற்றியமைக்க வல்லவை. நிரந்தரமான பிணைப்பை ஏற்படுத்த வல்லவை. அனுமன் இராமனைச் சந்தித்ததும் அத்தகையதே முன்பின் அறிமுகமில்லாத அவர்களை முக்காலத்திற்கும் ஒருங்கு சேர இணைத்தது அந்தச் சந்திப்பு. இராமனில்லாமல் அனுமனில்லை, அனுமனில்லாமல் இராமனில்லை. இது போன்றே, இராமகிருஸ்ணர் விவேகானந்தரின் சந்திப்பு. அவர்கள் சந்தித்ததும் நரேந்திரர் இராமகிருஸ்ணரைக் கேட்ட முதற் கேள்வி "ஐயா! தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?" என்பது தான். புகழ்பெற்ற பல்வேறு மதத்தலைவர்களைச் சந்தித்தபோது இதே கேள்வியைத்தான் அவர் கேட்டு வந்தார். ஒரு முறையும் அவருக்கு நேரான பதில் கிடைக்கவில்லை. இப்போது ராமகிருஸ்ணர் உடனே கூறிய பதில். "ஆம் உன்னைக் காண்பது போல் இறைவனையும் காண்கிறேன். இன்னும் ஆழ்ந்த தெளிவாகக் காண்கிறேன். இறைவனை உணர முடியும். உன்னைக் காண்பது போலவும் உன்னுடன் பேசுவது போலவும் இறைவனைக் காணவும் இறைவனுடன் பேசவும் முடியும். ஆனால் யாருக்கு அந்த அளவு அக்கறை இருக்கிறது? ஆனால் மனைவி மக்களுக்கும், சொத்து சுகத்திற்கும் குடம் குடமாக கண்ணீர் வடிப்பார்கள். கடவுள் வேண்டுமென்று கண்ணீர் வடிப்பது யார்? அவரைக் காணவேண்டுமென்று மனமார்ந்து கண்ணீர் வடித்தால் கடவுள் தன்னை நிச்சயமாக வெளிப்படுத்திக் கொள்வார்." பளிங்கு போன்ற நிர்மலமான அவரது முகத்தின் மூலம் அவரது மனத்தூய்மையை உணர்ந்த நரேந்திரர், அவரது வாக்கு சத்தியவாக்கு என்றறிந்தார். சொந்த அனுபவத்தின் மூலம் கடவுள் இருக்கிறார். என்பதை தெளிவாகக் கூறிய ஒருவரை நரேந்திரன் காணும் பேறு பெற்றார். இவ்வாறு அவருக்கென்று ஏற்பட்ட குருவினை கண்ட முதல் சந்திப்பிலேயே அவரது முக்கியமான சந்தேகம் விலகியது.

இவ்வாறு சீடரின் பயிற்சி நேர் வழியில் தொடங்கியது. அவரது இரண்டாவது சந்திப்பில் அவரது மெய் ஞான குருவின் ஆன்மீக சக்தியினை ஆழ்ந்துணரும் சந்தர்ப்பம் கிட்டியது. நரேந்திரர் நடந்ததை உற்றவாறு குறிப்பிட்டுள்ளார். நரேந்திரார் கூறியது :-

"குருதேவர் (ராமகிருஸ்ணர்) தனக்குள் எதையோ முணுமுணுத்துக் கொண்டு என்னையே பார்த்துக் கொண்டு என்னருகில் வந்தார். கண்மூடிக்கண் திறக்கும் நேரத்தில் அவர் என்மேல் வலதுகையை வைத்தார். அவரது ஸ்பரிசம் என்னுள்ளே ஒரு புதுமையான அனுபவத்தைத் தோற்றுவித்தது. என்கண்கள் திறந்திருக்கையிலேயே சுவர்களும் அறையிலுள்ள மற்ற ஒவ்வொன்றும் வேகமாகச் சுழன்று வெட்ட வெளியில் மறைவதைக் கண்டேன். பிரபஞ்சம் முழுவதும் "நான்" என்ற ஒருமை உணர்வும், எங்கும் சூழ்ந்துள்ள வெளியில் ஒவ்வொன்றும் கரையத் தொடங்கின. அவர் என் நெஞ்சினைத் தட்டி சரி இப்போது பழையபடியே இருக்கட்டும். ஒவ்வொன்றும் அதனதன் காலத்தில் தான் வரவேண்டும் என்றார். அதிசயத்திலும் அதிசயமான இந்த விந்தையான அனுபவம் மறைந்தது. நான் பழைய நபராக ஆகிவிட்டேன்."

இந்த ஆன்ம ஐக்கிய உணர்வைத் தூண்டிய ஸ்பரிஸம்தான் நம்பிக்கையற்ற நரேந்திரரை உலகம் புகழும் சுவாமி விவேகானந்தராக மாற்றியது. குருநாதரிடம் நரேந்திரன் கொண்ட சரணாகதி அவரை ஆன்மீக நிலையில் உயர்த்தியது. அவரது அகங்காரம் முழுதும் மறைந்தது.

சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம். தாளினைப் பணிநீதினம். தான் தன்னை அறியுமே. சாந்தமும் செறியுமே. பேரன்பு பெருகிவிடும். பேதமை கருகிடும். பிரியாப்பிரியமெல்லாம் பேசாமல் அகன்றிடும். ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும். ஆசாபாச மகலும் நேர அனுபூதிவரும். தேவாதிதேவர்களும் செய்வார் பணிவந்து. சீவன் சிவன் என்னும் தெளிவுமுண்டாகுமே.

**குருதத்துவம் எப்படி என்பதைப் பார்த்தோம். இவை அவதார புருஷர்களும் மகாத்மாக்களும் எப்படி சிஸ்யர்களாக இருந்தார்கள் இதையும் எங்கள் அவதார சற்குருவே தெளிவாக கிழக்குகிறார்.**

ஆசிரிய – மாணவ புனித உறவுமுறைக்கு பாரத பூமி பெயர் பெற்றது.

ஸ்ரீராமச் சந்திர மூர்த்திக்கு தசரதர் மூலமாக அறிமுகம் செய்யப்பட்டு உபனயனம் செய்ய வசிஷ்டர் குருவாக வந்தார். குருவைப் பணிந்தும் பணிவிடை செய்தும் குருவிரும்புபவற்றை நிறை வேற்றியும் எல்லாக் கலைகளையும் முறைப்படி பயின்றார் ஸ்ரீ ராமச் சந்திரமூர்த்தி. வந்திருப்பவர் அவதார புருஷர் என்பதை உணர்ந்தவர் குலகுரு வசிஷ்டர். எள்ளளவும் எதுவித தயக்கமுமின்றி உபதேசத்தை முறைப்படி செய்தார். அவரைப் பரிபூரணமாக மகிழ்வுறச் செய்தார் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி. அண்ணனைப்பார்த்து ஏனைய சகோதரர்களும் அவ்வாறே நடந்து குருவை மகிழ்வுறச் செய்தனர். இதுபோலவே துவாபர யுகத்தில் பகவான் கிருஸ்ணருக்கு சாந்தீபினி என்ற குருவின் உபதேசம் கிட்டியது. ‘இறந்த மகளை மீட்டுக் கொடுத்தார் கிருஸ்ணர்’ தமது குருவான சாந்தீபினிக்கு. அதேபோல அத்வைத தத்துவத்தை அனுபவமாக்கிய ஆதி சங்கரருக்கு குருவாக தந்த கோவிந்தர் அமைந்தார்.

ஆதிகுருவான வேதவியாசர் ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி தன் புத்திரராகிய சுகருக்கு அத்தியாபனம் செய்வித்தார். கங்கைக் கரையில் ரிஷி சிரேஷ்டர்களால் சூழப்பெற்றுப் பிராயோபவேசம் செய்திருந்த பரிக்ஷித்து மகாராஜாவுக்குச் சுகர் இதை உபதேசித்தார்.

“குருபக்தியே பெரும் பேறு
கொண்டாடி கொண்டாடி ஆறு”

*ஜெய் சாயி ராம்.*

*க.மகேஸ்வரன்,*
*ஆன்மீக இணைப்பாளர்,*
*வடபிராந்தியம்.*

*“ஒவ்வொரு கிராமப் பாடசாலையும் குருகுலமாக மாற்றப்படவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு ரிஷியாக மாற்றப்பட வேண்டும். மாணவர்கள் இலட்சியப் பிரஜைகளாக, நாளாந்த வாழ்க்கைக்குரிய சிறப்பார்ந்த இயல்புகளையும் கொண்டிருக்க முடியும். வித்யா, இவற்றை மனிதமுன்னேற்றத்திற்குரிய வகையில் இதயத்திலே ஆழ வேரூன்றவைக்கிறது.*

*- பாபா -*

# மிகப் பெரிதாய் அவரிடம் காணப்படுவது அன்பு

**{Baba is god in Human Form என்ற நூலில் அணில்குமார் காமராஜு அவர்கள் எழுதிய Love - His Greatest Manifestation என்ற கட்டுரையின் தமிழாக்கம். அணில்குமார் அவர்கள் பாபாவின் மொழிபெயர்ப்பாளர்: சத்திய சாயி பல்கலைக்கழகத்தின் பிரசாந்தி நிலைய வளாகத்தில் உயிரியல் விஞ்ஞானப் பேராசிரியர்}.**

1970ஆம் ஆண்டு கலாநிதி பகவந்தம் அவர்கள் நான் வசிக்கும் நகரத்துக்கு விஜயம் செய்து, சாயி பாபாவோடு தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி அறிவியல் ரீதியாக ஒரு பிரசங்கம் செய்தார். அந்தப் பேச்சு என் மனதில் ஆழப்பதிந்து விட்டது. அதன்பின்பு அதே ஆண்டில் குடும்பத்தில் நெருக்கடிகள் தோன்றின. அதனால் சாயிபாபாவின் உதவியை வேண்டுவதற்காக பிரசாந்தி நிலையத்துக்கு புறப்பட்டுச் சென்றேன்.

சாயி பாபாவோடு பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பாதங்களைத் தொடுவதற்கும் கிட்டவில்லை. நினைத்தது கைகூடாமல் அவர் சமூகத்தில் ஐந்து நாட்கள் கழிந்தன. அவரின் தெய்வீகத் திருவிளையாடலை என்னென்பது? அவர் பெரும்பாலும் அங்கிருந்த ஒவ்வொரு நபரோடு பேசினார் என்னைத் தவிர. இருந்தும் நான் வீடு திரும்பியபோது குடும்ப நெருக்கடி தீர்வுற்றிருப்பதைக் கண்டேன்.

நான் பிரசாந்தி நிலையத்தில் இருந்த சமயம் எனது மனைவியின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருந்தது. அங்கே மனதுக்குள் நான் வேண்டியது இதுதான். நீங்கள் உண்மையாகவே தெய்வமாக இருந்தால் அவளுக்கு உடல் நலத்தை மீண்டும் கொடுங்கள். ஏனெனில் எங்களுக்கு நான்கு குழந்தைகள். அவள் இறக்கும்படியாக ஏதாவது நடந்தால் தனியே குழந்தைகளைக் காப்பாற்ற என்னால் முடியாது.

நான் அவரோடு பேச்சுக் கொடுக்காதிருந்தும், பாத நமஸ்காரமோ வேறெதுவுமோ கிடைக்காதிருந்தும் நல்லபடியாக மனைவி தேறிவிட்டாள். இதன்பின் அவர் அருளுரை அடங்கிய நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். எனக்குப் புதிய ஊக்கம் பிறந்தது.

மாணவப் பிராயத்தில் பேச்சுக் கலையிலும், விவாதங்களிலும் முன்னணியில் நின்றேன். ஆனால் படிப்பில் அவ்வாறு இருந்ததில்லை. எனது கல்விச் செயற்பாடுகளில் நான் ஜொலிக்கவில்லை. ஆனால் எல்லாப் பேச்சுப் போட்டிகளிலும், பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளிலும் கூட எப்போதும் முதலிடம் பெற்றேன். பொது மேடைகளில் பேசுவதிலும் தெளிவாகக் கருத்தைப் பரிமாறும் திறனைக் கற்பதிலும் வெகு ஊக்கமாக இருந்தேன்.

சுவாமியின் உரைகளில் புத்துணர்வு பெற்ற சிறுசிறு குழுவினரோடு பகிர்ந்துகொண்டேன். அதன்பின் தங்கள் இடத்துக்கு வந்து பேசும்படி என்னை அழைக்க ஆரம்பித்தார்கள். எட்டு வருடங்களாக இவ்வாறு கழிந்தன. பல தடவைகள் சாயிபாபாவைத் தரிசிக்கச் சென்றேன். அவர் என்னைப் பார்க்கவேயில்லை. ஆண்டாண்டாக இப்படி நடந்தது. இந்தப் பாராமுகம் எனக்கு மாத்திரமல்ல, என் வரிசையில் இருந்த அத்தனை பேருக்கும்தான். இதுபற்றி நண்பர்களுக்கு நான் சொல்வதுண்டு. ''கன்டீனில், ஹோட்டலில் என்னோடு கூட உட்காருங்கள். ஆனால் தரிசன வரிசையில் மாத்திரம் இருந்துவிட வேண்டாம். சாயிபாபா உங்களை நிச்சயமாகப் பார்க்க மாட்டார்''. எப்படியோ மிக நீண்ட எட்டு வருடங்களின் பின் என்னை அழைத்தார். எதற்காகவென்றால் பூர்ணசந்திர மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றுவதற்கு. அன்றுதொட்டு நான் அவருக்கு நெருக்கமானவனாக இருந்து வருகிறேன்.

விலக்கி வைக்கப்பட்டிருந்த எட்டு வருடங்களின் பின், 1977இல் பிரசாந்தி நிலையம் நோக்கி நான் பயணம் செய்துகொண்டிருந்த போது, சாயி பாபாவின் வண்டி எதிரிலிருந்து வந்து, கடந்து, அனந்தப் பூர்ப் பக்கம்போய்க் கொண்டிருந்தது. நானும் வளைந்து திரும்பி அனந்தப் பூர் வரைக்கும் அவரைப் பின்தொடர்ந்தேன். அனர்ந்தப்பூர் பெண்கள் கல்லூரி அறக்கட்டளை தொடர்பில் சுவாமி ஏதோ அலுவலாக இருக்கிறார் என்று அங்கே தெரிந்து கொண்டேன். நீங்கள் நன்கு அறிந்த செய்திதான் இது. அந்தப் பெண்கள் கல்லூரியில் ஓர் ஆண் நுளம்பு கூட உள் நுழைய முடியாது.

நுழைவதற்கு அனுமதி கேட்டு காவலாளியோடு வாதாடிக்கொண்டு வாயிலுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தேன். அவன் என்னை உள்ளே போகவிடவில்லை. உதவியின்றி வெளியே காத்து நின்றேன். அப்போது எதிர்பாராத விதமாக பல முக்கியஸ்தர்கள் புடைசூழ சுவாமி வாயிலருகே வந்தார். என்மீது இரங்கிய காவலாளி, ''சார் கொஞ்சக் காலடிகள் தூரம் உள்ளே நீங்கள் தடையில்லாமல் போகலாம். அதற்கு மேலே போக வேண்டாம்'' என்றான். ''சரி'' என்று சொல்லி நான் உள்ளே சென்றேன்.

சுவாமி திடீரென்று, ''அனில்குமார் இங்கே வா'' என்று உரத்துக் கூப்பிட்டார். அவரை நோக்கி ஓடுகையில் மனதில் எண்ணமிட்டேன். என் பெயர் எப்படி அவருக்குத் தெரிந்தது? எட்டு வருடகாலமாக ஏன் என்னிடம் பாராமுகமாக இருந்தார்? ஏன் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை? என்னுடைய பிரச்சினைகள் அவருக்குத் தெரியாமலா இருந்தது? எண்ணம் ஒரு புறம் அதே நேரத்தில் ஆனந்தம் என்னுள் பொங்கி நிறைந்தது.

''நேற்றிரவு நீ என்னைப் பற்றிச் செய்த சொற்பொழிவு எல்லோருக்கும் பிடித்திருந்தது'' என்று சொன்னார் சுவாமி. தொடர்ந்து ''உன் மனைவியின் சுகம் எப்படி?'' என்று கேட்டார். ''சுவாமி, நான் உங்களிடம் வருவதற்கு அவள்தான் காரணம்'' என்றேன். ''எனக்குத் தெரியும்'' என்று கூறியவர், கொஞ்சம் விபூதி சிருஷ்டித்துத் தந்துவிட்டு புட்டபர்த்திக்குவந்து தன்னைப் பார்க்கும்படி சொன்னார்.

ஆந்திர மாநில சாயி நிறுவனத் தலைவராக இருந்த காரணத்தினால் உலக சபைக் கூட்டங்களிலும் நான் பங்குபற்றுவதுண்டு. ஒரு வருடம் உலக சபையின் உறுப்பினர் கூட்டத்தை சாயிபாபா மந்திரில் கூட்டினார். அவருக்கு அங்கே ஒரு மொழிபெயர்ப்பாளர் திடீரென்று தேவைப்பட்டது. தெலுங்கு பேசும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவனானபடியால் என்னை உடனே தெரிவுசெய்து

மொழிபெயர்த்து உரைக்கச் சொன்னார். பேச்சின் முடிவில் ஒவ்வொரு தடவையும் ''வேகமாக இன்னும் வேகமாக'' என்று சொல்வார். அதோடு சரி அதன்பின் சிறிது காலத்துக்கு மொழிபெயர்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

1989இல் வைட்பீல்டிலுள்ள சத்திய சாயி கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டேன். அதுமுதல் மொழிபெயர்ப்பு எனது வழமையான பணியாகிவிட்டது. இந்த வேலையைப் பற்றிக் குறிப்பாகச் சொல்வதானால் நூற்றுக்கு நூறு திறம்படச் செய்தேன் என்று சொல்ல முடியாது. இதிலே நான் விசேட தகுதி எதுவும் பெற்றிருக்கவில்லை. இதைச் செய்யக்கூடிய நபர் நான் மட்டும்தான் என்பது நிச்சயமாக இல்லை. நான் வகிக்கும் இந்தப் பாகம் நான் தேடிப்பெற்றது என்பதல்லாமல் எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு என்றே மதிக்கிறேன். இது எனக்கு வழங்கப்பட்ட நல்லாசி, என் வேண்டுதலுக்குக் கிடைத்த பயன் அல்ல.

இந்தப் பணியில் பல தடவைகள் தடுமாறியிருக்கிறேன். அப்போதெல்லாம் சாயிபாபா என்னைத் திருத்தியிருக்கிறார். இதில் இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டியிருக்கிறது என்பதை அறிவேன். நான் நிறைவுடைய ஒருவனல்ல என்பதும் தெரியும். ஏதோ சாயி பக்தர்களுக்கு அவசியமானதை நிறைவு செய்கிறேன் என்பதே என் நம்பிக்கை.

எனக்கு மிகப் பெரிதாக அவரிடம் தெரிவது அன்பும், சிரத்தையும்தான். ஓர் உதாரணம் :- இது பல வருடங்களின் முன் நடந்தது. என் மகன் பொறியியல் பட்டப்படிப்பு நுழைவுக்கு எழுதிய தேர்வு முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். முடிவுகள் வெளிவரும் அன்று காலை இந்திய முதல் குடிமகனான ஜனாதிபதி அவர்கள் பிரசாந்தி நிலையத்துக்கு விஜயம் செய்யவிருந்தார். தரிசன வரிசையில் நான் இருந்தேன். சாயிபாபா மெதுவாக அடிவைத்து நடந்து வந்து முறுவலோடு இரு கரங்களையும் உயர்த்தி ''எப்படி சார் இருக்கிறீர்?'' என்றார்.

''மிக்க நலத்தோடு இருக்கிறேன் சுவாமி'' என்று சொன்னேன்.

''உன் மகனுடைய சேதி என்ன?'' என்று கேட்டார்.

''பரீட்சை முடிவை எதிர்பார்த்திருக்கிறேன்'' என்று பதில் சொன்னேன்.

''அப்படியல்ல. அவன் தெரிவுசெய்யப்படுகிறான். அவன் ஒரு பொறியியலாளனாகப் போகிறான். திறமையோடு சித்தியடைவான். நீ கவலைப்படாதே அனில்குமார்.''

உடனே அவர் பாதங்களில் வீழ்ந்தேன். இப்படி எண்ணியபடி இந்தச் சிறு மனிதனான அனில்குமார் மீது கரிசனை காட்டினீர்கள். சுவாமி, பதவி, அந்தஸ்து, பணம் எல்லாவற்றுக்கும் மேம்பட்டு நிற்கும் அன்புக்கு சிரத்தைக்கு நான் நன்றிக் கடனுடையவனாவேன். ஆம் மிகப் பெரிதாக நான் அவரிடம் காண்பது அன்பைத் தான்.

பலராமனைப் பற்றி எத்தனைபேர் கேள்விப்பட்டிருப்பீர்களோ தெரியாது. பலராமன் கிருஷ்ணருடைய சகோதரன் ஒருநாள் சாயிபாபா அடுத்தநாள் மதிய போசனத்துக்கு தமது பள்ளி மாணவர்களையும், சில விருந்தாளிகளையும் விசேஷமாக அழைக்கப்போவதாக அறிவித்தார். மதிய உணவு விடயத்தில் அப்படி என்ன விசேஷம் என்று சுவாமியைக் கேட்டேன். பலராமன் – ரேவதி திருமணம் குறித்து அவர் பேசப்போவதாகவும், அடுத்த நாள் அவர்களுடைய திருமணநாள் என்றும் கூறினார். அந்த மதிய போசனம் இருபத்தைந்து வகையான பதார்த்தங்களோடு ஒரு விமரிசையான விருந்தாக அமையவிருந்தது.

மறுநாள் விசேஷ மதிய போசன விருந்து நடைபெற்றது. வெளிநாட்டவர்களும், கௌரவ விருந்தினராக இன்னும் பலரும் கலந்து கொண்டார்கள். அன்று மாலை சுவாமியின் உரை இடம்பெற்றது. பலராமன் ரேவதி திருமணத்திற்கு எல்லாக் கடவுளரும் தேவியரும் சமூகமானது பற்றி விவரித்துக் கூறினார். பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களோடு ஏனைய தேவ தேவியரும் சமூகமாயிருந்த அந்தத் தெய்வீகத்திருமண வைபவத்தின் முடிவில் பிரம்மா திருமணப் பரிசு ஒன்றை வழங்கினார் என்றார் சுவாமி.

“அது என்ன பரிசு?” என்று யாரோ சுவாமியைக் கேட்டார்கள்.

இக் கட்டத்தில் பாபாவின் கரம் மும்முறை காற்றிலே வட்டமிட்டது. தேனீக் கூட்டத்தின் ரீங்காரம்போல் ஓசை கேட்டது. அங்கே கூடியிருந்த கூட்டத்தினர் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைய சுவாமி ஒரு கூஜா அளவிலான பொருளொன்றைச் சிருஷ்டித்தார். அதன் அமைப்பை விளக்கிக் கூறவேண்டும். அது வில்லைப்போல் வளைந்திருந்தது. வரிசைக்கு நான்கு வைரங்களாக நாலு வரிசைகளில் இருநூறு வைரக் கற்கள் வரையில் அதில் பதிக்கப்பட்டிருந்து. அதன் சட்டம் தங்கத்தினாலானது. அதிலும் நான்கு வரிசைகளில் வைரம் பதிக்கப்பட்டிருந்தது. பீடமும் தங்கம் தான். நட்ட நடுவிலே அலங்காரமாக ஓர் அன்னப்பட்சி வைரக் கண்களோடு தங்கச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் வயிற்றுப் பகுதி கண்ணாடிபோல் ஊடுதெரியக்கூடியதாக இருந்தது.

எல்லாரும் அசந்துபோய் அதைப் பார்க்கலானார்கள். “அனில், கவனித்துப் பார்” என்றார் பாபா. “அஹா, பிரமாதமாயிருக்கிறது சுவாமி” என்றேன். “அதுவல்ல அன்னத்தின் அலகைப் பார்” என்று சொன்னார்.

‘‘பார்க்கிறேன் சுவாமி’’ என்றவன் தொடர்ந்து, ‘‘சுவாமி அது ஒன்றும் புதுமையாகத் தெரியவில்லை. நான் ஒரு முட்டாளாக இருப்பது எனக்குத் தெரிகிறது. இதுவரை நான் அறிந்திராத ஒன்று அங்கே இருப்பதாக இந்தப் புத்தி சொல்லவில்லை. இந்த முட்டாள் புத்தி இப்போது தான் ஏற்பட்டதாக இருக்காது. நான் இருந்தபடி முட்டாளாகவே இருந்துவிட்டுப் போகிறேன்” என்றேன். “ஏ முட்டாள் வயிற்றைக் கவனி” என்றார் சுவாமி.

நான் அன்னத்தின் வயிற்றை உற்றுப் பார்த்தேன். அங்கே கண்டது வேறொன்றும் அல்ல. பகவான் சத்தியசாயி பாபா சாய்ந்து வீற்றிருக்கும் திருக்கோலம் அதுவன்றோ காட்சி! அது போன்றதொரு காட்சியை இனிவரும் காலத்தில் காண்பேனா? அப்படி நினைக்கவில்லை.

தமிழாக்கம்:-**V.K.** சபாரட்னம்.

*ஜெய் சாய் ராம்.*

**ஒருவனுடைய கோபம் அவனுடைய எதிரி**

**ஒருவனுடைய அமைதி அவனுடைய பாதுகாப்பு**

**ஒருவனுடைய மகிழ்ச்சி அவனுடைய சுவர்க்கம்**

**ஒருவனுடைய துக்கம் அவனுடைய நரகம்**

- பாபா -

# வெல்லத்தை நாடியே எறும்புகள் வரும். ஆனால் எறும்புகள் அனைத்தும் சேர்ந்து வெல்லத்தை இழுக்க முடியுமா?

*(ஓர் ஊக்குவிப்புக் கட்டுரை)*

***(பேராசிரியர் அனில்குமார் கட்டுரையிலிருந்து – ச.சா.டிசம்பர் 2006)***

சுவாமி! எங்கள் நாட்டிற்கு எப்போது வருவீர்கள்? என்று ஒருவர் கேட்டபொழுது சுவாமி அளித்த பதில் ''வெல்லத்தை நாடி எறும்புகள் வருமே அல்லாது, எறும்பைத் தேடி வெல்லம் போவதில்லை'' ஆனால் எறும்புகள் அனைத்தும் சேர்ந்து வெல்லத்தை இழுத்துக் கொண்டு போக முடியும். சுவாமி சொல்லிவிட்டார். நம்முள் தயக்கமேன்? சாயி அடியார்களாகிய நாம் வெல்லத்தை (சாயியை) இங்கு ஏன் கொண்டு வர முடியாது? இலங்கைக்கு வருவேன் என்று கூறிவிட்டார். இதற்கு மேலாக என்ன சொல்ல வேண்டும். எல்லாம் எங்கள் செயற்பாட்டில் தான் உள்ளது. இதை உணர்ந்து செயற்படுகிறோமா? அவரின் போதனைகளை ஒழுங்கு முறையாகக் கடைப்பிடிக்கிறோமா? அவருடைய அவதாரப் பணிகளில் ஒத்துழைக்கிறோமா? அவரைச் சந்தோஷப்படுத்துவதற்கான செயல்களில் இறங்கி விட்டோமா? அவரை இதயத்தில் ஒரே கடவுளாக வைத்துப் பூஜிக்கிறோமா? அவருக்கு நாங்கள் செய்யும் செயல்களின் பலனை அர்ப்பணிக்கிறோமா? இவை எல்லாம் எங்கள் செயல்களில் மீள் பரிசோதனைக்கு உரிய விடயங்கள்.

நாங்கள் பஜனை செய்கிறோம். ஆன்மீக சாதனை செய்கிறோம். சேவை செய்கிறோம். இந்தச் செயற்பாடுகள் எங்களில் உயர் மனமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கும். இதன் விளைவுகள் நல்ல அதிர்வுகளை சூழவும் ஏற்படுத்தி இருக்கும். ஆனால் முழுமை பெற்று விட்டதா? இதற்கு விடை காண இயலாது. இதைச் சுவாமியிடமே விட்டு விடுவோம்.

சுவாமி இங்கு வந்து (உணர்வுபூர்வமாக) எவ்வளவோ நல்ல மாற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒரு விதையிலிருந்து தோன்றும் பயிர் நிலத்துக்கடியில் என்ன என்ன மாற்றங்களைப் பெறுகிறதோ என்பது நமக்குத் தெரியாமலே நடைபெறுகிறது. பயிராக நிலத்துக்குமேல் வந்து பூத்துக் காய்க்கும் பொழுதுதான் அதன் முழுமையைக் காண்கிறோம். அது போலவே சுவாமியின் செயல்களும் பஜனை, ஆன்மீகம் சேவை மூலம் எங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இது உலகம் எங்கும் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து'' என்ற மந்திரத்தை அடிக்கடி உச்சரிக்கச் சொல்கிறார். ஒரு நாட்டு மக்களுக்காக மட்டுமல்ல, எல்லாநாட்டு மக்களுக்குமாக பிரார்த்தியுங்கள். இதைச் செய்கிறோமா? யோசிக்க வேண்டிய விடயம். ஆன்மீக சாதனை முடிவில் எங்களுக்கு சாதனையைத் தொடர்ந்து செய்வதற்காக எல்லோருடைய தேகசுகத்திற்காகவும், நல்ல சூழலுக்காகவும் பிரார்த்திக்க வேண்டும். இது

தேக அபிமானமல்ல) சுவாமியே சொல்கிறார். என்னுடைய உண்மையான பக்தர்களின் பிரார்த்தனை காரணமாகவே, தான் சுகப்பட்டு எழும்பி நடக்க முடிந்ததென்று. அந்தளவிற்கு அவர் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தேவர்களெல்லாம் அரக்கர்களால் துன்பப்பட்டு சிவபெருமானைப் பிரார்த்தனை செய்து, முருகப் பெருமானின் அவதாரம் நிகழ்ந்த போதுதான் துன்ப துயர்களிலிருந்து நீங்கினார்கள். இன்றும் அதுதான் நடக்கப் போகிறது.

இன்றைய அவதாரம் சாயி அவதாரம். அவர் தரும் சோதனைகள், கஷ்டங்கள் எல்லாம் அவர் தரும் பிரசாதம். இவற்றை அன்போடு ஏற்றுக்கொண்டு, எங்களுக்காகவே இவற்றைச் செய்கிறார். லோக கல்யாணத்திற்காகவே இதைச் செய்கிறார் என்ற மனப்பக்குவத்துடன் அர்ப்பணிப்பான பிரார்த்தனையை செய்ய வேண்டும். இதன் மூலம் எங்களில், எங்கள் சூழலில் ஏற்படும் அதிர்வுகள் மற்றவர்களையும் நல்ல நிரந்தர மனமாற்றத்துக்குள்ளாக்க வேண்டும். இதைனை சுவாமி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இது எப்பொழுது நிகழும்? அப்பொழுது சுவாமியின் பிரசன்னமும் இங்கு நிகழும். இதற்கு மாற்றுக் கருத்து இருக்காது. சாயி அடியார்கள் சாயி பாகவானின் பிம்பமாக இருந்துகொண்டு அவரின் அவதாரப் பணிகளில் ஈடுபடுவோம்.

மேலும் பேராசிரியர் அனில்குமாரின் கட்டுரையிலிருந்து நாம் எவ்வளவோ படிக்கிறோம்! மற்றைய நாடுகளில் சாயி நிலையங்களின் செயற்பாடுகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதை அறிந்து கொள்வதற்கு நல்லதோர் ஊக்குவிப்புக் கட்டுரை. எங்கள் நாட்டில் என்ன சாயி செயற்பாடுகள் நடக்கின்றன. பூ! இவ்வளவுதானா! என்று அதிசயிக்கும் அளவிற்கு அக்கட்டுரை உள்ளது. பகவானின் வலது கையாக இயங்குபவரை, பேராசிரியர் அனில்குமாரை ஆஜென்ரைனா நகர விமான நிலையத்திற்கு வழி அனுப்புவதற்காக திரண்டு வந்திருந்த சாயி அடியாரின் பக்தி என்னே! விமான நிலையத்தில் கூட பஜனைப் பாடல்களா? என்று அதிசயிக்கும் அளவிற்கு சாயி பகவானின் அதிர்வலைகள் நிறைந்திருந்தன. இவையெல்லாவற்றையும் சிந்திக்கும் பொழுது நாங்கள் எங்கள் நாட்டில் எந்தளவில் முன்னேறி இருக்கிறோம் என்பதை அறியமுடிகிறது.

உலகம் முழுக்கத்தான் அவர் காலை ஊன்றி விட்டார். அவரின் செயற்பாடுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. எங்கள் செயற்பாடுகளில் வேகம் போதுமா? என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது. அவர் எதற்காக யாகம் செய்கிறார், சேவைகள் செய்கிறார் என்ற நோக்கத்தை விளங்கிக் கொண்டு, பிரார்த்தனைகள் மூலம் அவரின் செயல்களை வலுப்படுத்துவோம். அவருடைய அவதாரப் பணியில் நாமும் பங்காளிகளாகி அவரின் அருளைப் பெறுவோம். சாயி கூறும் பொற்காலம் (ச.சா.ஜனவரி 2007, பக்கம் 19) விரைவில் வர இருக்கிறது. எமது இளம் சந்ததியினருக்கான இப்பொற்காலம் நீடித்து நிலைக்க பகவானின் போதனைகளை 100% கடைப்பிடித்து லோக கல்யாணத்திற்காக மகிழ்வுடன் உழைப்போமாக!

*ஓம் ஸ்ரீ சாயி ராம்*

**பொ.யோகேஸ்வரராஜா,**
**கொக்குவில்.**

# புட்டபத்தி

*மனசுக்குள் கோயில் கட்டி*
*அதிலுன்னை இருத்தி வைச்சு*
*பூசையொண்டு செய்திடுவேன் ராசா - என்*
*தோட்டத்தில் பூத்திருக்கு ரோசா*

*பஜனையென்டும் சேவையென்டும்*
*நாள்தோறும் நான்செய்யும்*
*வேலையெல்லாம் வெறும்வேசம் - என்னை*
*திருத்தாத நீ ரொம்பமோசம்*

*நான் உன்னட்ட வாறதால*
*கேட்கிறதெல்லாம் நீ தாறதால*
*கனபேருக்கு உன்மேல கோவம் - ஐயோ*
*என்னால நீ ரொம்ப பாவம்*

*என்னத்தை சொன்னாலென்ன*
*என்னத்தை செய்தாலென்ன*
*உன்ரைவழி போகுதில்லை புத்தி - என்டாலும்*
*என்ரை கடைசி இடம் புட்டபக்தி.*

**க.வசந்தன்,**
**நல்லூர்.**

# இளைஞர்களைப் பற்றி "வேதாந்த கேசரி" என்ற இராமகிருஷ்ணமிசன் ஆங்கில சஞ்சிகையில் (டிசம்பர் 2005) வெளிவந்தவை.

இளைஞர் பலருமே ஆளுமை வளர்ச்சியின் உச்சகட்டம். மிகவும் மதிப்பு வாய்ந்த வாழ்க்கை நிலை. பச்சை சீமெந்தில் கீறுவது எப்படி நெடுநாட்கள் நிற்குமோ அப்படி மனதில் பதியுங் காலம். இப் பருவத்தில் நல்ல வழிகாட்டல்கள் முக்கியம். இவர்கள் உச்சமான நிலையை அடைய வேண்டுமென்றே ஆசைப்படுவார்கள். ஆனால் பகட்டுக்கும் உன்னதத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் பிழைவிடுங்காலம். உலகத்தைத் திருத்த வேண்டுமென்ற ஆசையின் நிமிர்த்தம், சமூக அரசியல் இயக்கங்களில் சேர முனைவார்கள். இதனால் வன்முறையில் ஈடுபடும் இயக்கங்களில் சேர்ந்து உயிரைத் தியாகம் செய்வது ஓர் உன்னதமானதென்றெண்ணித் தியாகமும் செய்துவிடுவார்கள். அல்லது ஓர் உன்னத ஆன்மீக மகானாக வரும் சத்தியும் உண்டு. இதற்காக உலக சுகபோகங்களைத் துறக்க பின்நிற்க மாட்டார்கள்.

தற்போதைய ஊடக வளர்ச்சியும், சந்தைப்படுத்தும் திறனும், இளைஞர்களைத் தான் குறிவைக்கிறது. புதுமை, பலம், மகிழ்ச்சி என்ற மாயையில் வீழ்ந்து, போகும் திசை தெரியாமல் பதட்டப்படுவார்கள். ஆகவே இளைஞர்கள் தீவிர வன்முறையாளராகவும் மாறலாம் அல்லது எல்லோருக்கும் நன்மை அளிக்கும் ஓர் உத்தமனாராகவும் விளங்கலாம்.

உன்னத சுயமாற்றம் அனைவருக்கும் சேவை செய்யும் இலட்சியத்தையே இளைஞர்கள் பின் பற்ற வேண்டும். ஆன்மீக மகானாக உலகில் வாழத் பல தடைகள் ஏற்படுகின்றன. அகத் தடையுடன் புறத்தடைகளுண்டு. பெற்றோர், சகபாடிகள், சமூகத்தலைவர்கள் முன்மாதிரியற்றவர்களாக இருப்பார்கள். சூழலும் பகமையானதாக இருக்கும்.

ஒரு நிறுவனமோ அல்லது இயக்கமோ முன்வைக்கும் இலட்சியம் கவர்ச்சியாக இருந்தால், இளைஞர்கள் பெருமளவில் சேர்ந்து கொள்வதால், நிறுவனம் துரித வளர்ச்சியடையும்.

முதியோரால் செய்யக் கஷ்டமான திட்டங்களை இளைஞர் தமது கூட்டுச் சக்திமூலம் செய்து முடித்துவிடுவார்கள். இளைஞர் பருவம் ஞான நிலைக்கு எய்த தடையானதல்ல.

சுந்தரமூர்த்தி நாயனார், ஆதி சங்கரர்,
சுவாமி விவேகானந்தர், சுகமுனிவர்,
மார்க்கண்டேயர் ஆகியோர் இளம் பருவத்திலேயே உன்னதநிலையை அடைந்தார்கள்.

## எவ்வாறு இளைஞர்களின் உள்ளார்வத்தைக் கூட்டலாம்?

✱ மனிதன் தெய்வீக மானவனே என்பதில் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்.
✱ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.
✱ உன்னத மகான்களின் வரலாற்றைப் படிக்கவேண்டும்.

✱ பிரார்த்தனையும் ஆழ்ந்த சிந்தனையும் தேவை.

✱ சேவையில் ஈடுபடுதல்

✱ மதுபோதை, புகைத்தல், மாமிசம் புசித்தல் போன்றவற்றை விலக்க வேண்டும்.

✱ தூய்மையாவதன் மூலம் விசேடமாக பாலுணர்வைக் கட்டுப்படுத்துவதன் மூலம் புத்திப் பலத்தை பெருக்கலாம்.

✱ திறமையான கல்வி. தற்போதைய கல்வி முறை சீர்திருத்தப்படவேண்டும். பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும். மன ஒருங்கு வைராக்கியம் நேர்மறைச் சிந்தனை வாழும் கலைகள்.

✱ சுவாமியின் எஜுகெயர், மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தில் பங்கு கொள்ளல்.

✱ இலஞ்ச ஊழலிலிருந்து சமுதாயத்தைத் தப்ப வைக்க, நாம் முதலில் திருந்த வேண்டும்.

✱ மாணவர் காலத்தில் அரசியலில் தீவிர பங்காற்றாமல் இருக்க வேண்டும்.

✱ பற்றற்ற தன்மையும், தன்னலமற்ற சேவையுமே தேசத்தின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். இவ்விரண்டையும் தீவிரமாகக் கடைப்பிடித்தால் மற்றயவையெல்லாம் தாமாகவே திருந்திவிடும்.

## இளைஞர்கள் மேலும் அறிந்து கொள்ளவேண்டியவை :

இளைஞர்களும், முதியோர்களும் சேர்ந்ததே சமுதாயம். இரு பகுதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். முதியவர்கள் ஊழல், அநீதி, சுரண்டல் ஆகியவற்றை நீக்க முயற்சிக்க வேண்டும். இளைஞர்கள் கட்டுப்பாடு ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதன் மூலமே விடுதலையை அடையலாம். உன்னத மனமாற்றமே ஞானத்தைப்பெற வழிவகுக்கும். காரண காரியத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

✱ கட்டுப்பாடற்ற நிலை சுதந்திரம் அல்ல – **மறியலேயாகும்.**

✱ பொறுமையின்மை வீரமல்ல, – **நரம்புத்தளர்ச்சியேயாகும்.**

✱ வன்முறை வீரமல்ல – **வீரம் குன்றியதேயாகும்.**

✱ பெறும் வழியின் தூய்மையைப் புறக்கணிப்பது நவீன – **சிந்தனையல்ல, சிந்திக்கும் சூழ்நிலையின்மையேயாகும்.**

✱ எதையும் அனுமதிக்கும் நடத்தை நவீன நாகரீகம் அல்ல – **கீழ் இச்சைகளின் அடிமைத் தனமேயாகும்.**

இளைஞர்கள் பொதுவாக ஆன்மீகத்தில் நாட்டங் கொள்வதில்லை. ஆன்மீகம் விஞ்ஞானமற்றதும் தேவையற்றதுமென்ற தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளான அல்பெற் இன்ஸ்ரைன், விறிற்யொல் கப்றா, ஒப்பன் ஹைமர் ஆகியோர் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டிருந்தார் களென்பதை அறிய வேண்டும். ஆன்மீகமும் உலகாயுதமும் இரண்டல்ல. உலகாயுதத்தையும் ஆன்மீக மயமாக்க வேண்டும்.

வாழ்வு, பிரச்சினைகள் மிகுந்த ஒன்றேயாகும். நாம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டும். அத்துடன் அவற்றிற்குத் தீர்வும் காணவேண்டும். ஆன்மீக நோக்கை விருத்தி செய்வதன் மூலமே இவ்விரண்டையும் எய்தலாம்.

ஆளுமை வளர்ச்சியில், ஐந்து கோசங்களையும் வளரச் செய்ய வேண்டும்.

**உ+ம் :-**

அன்னமைய கோசம் – உடல் வலிமையைப் பெருக்குவதற்கு சாத்வீக உணவு, தேகாப்பியாசம், யோகாசனம், ஆறுதல் ஆகியவை உதவும்.

பிராணமய கோசம் – பிராணயாமம் செய்தல்

மனோமய கோசமும், விஞ்ஞானமய கோசமும் – படிப்பு, பகுத்தறியும் ஆற்றல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல், மனஒருமை, 5D ஐ கடைப்பிடித்தல், இலட்சியத்தைக் கடைப்பிடித்தல் ஆகியனவாகும்.

ஆனந்தமய கோசம் – மனதில் சாந்தி, தியானம் ஆன்மீக சாதனைகள் மூலம் விருத்தி செய்யலாம்.

கல்வியைப் புறக்கணித்துச் சேவையிலீடுபடத் தேவையில்லை. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் ஈடுபடலாம். சேவை நிறுவனத்தில் சேர்ந்து ஈடுபடுவதே விசேடம். சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது செய்ய வேண்டும்.

இளைஞர்கள் தங்களின் சக்தியை சோம்பலாக இருப்பதன் மூலமும், வீண்பொழுது போக்காலும், பலதைச் செய்ய முனைவதாலும், ஒழுங்கின்றி செயற்படுவதாலும் விரயமாக்காது உள் சக்தியைப் பெருக்க வேண்டும். ஆன்மீக நோக்கில் பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சுதந்திரம் என்றால் கட்டுப்பாடற்ற நிலையல்ல. விரும்பியவற்றைச் செய்வதல்ல. ஆன்மீக நோக்கில் சுதந்திரம் என்றால் ஐம்புலனாதிக்கத்தில் இருந்தும் விடுதலை, விருப்பு வெறுப்பு அற்ற நிலை. பாராபட்சம் அற்ற நிலையேயாகும்.

கட்டுப்பாட்டின் மூலம் தான் உள்ளிருக்கும் ஆக்க முயற்சியைக் பெருக்கலாம். அசாதாரண உன்னத படைப்புகள் அனைத்தும் நெடுங்காலக் கட்டுப்பாட்டால் விளைந்தனவேயாகும்.

உயர்சிந்தனைச் செயலுக்கும், உணர்ச்சிவசச் செயலுக்கும்,தொழிலுக்கும் பிரார்த்தனைக்கும், ஆன்மீகம் உலகாயுதம் ஆகியவற்றின் இடையே உள்ள இடைவெளிகளை அகற்றுவதே ஆன்மீக சாதனையென்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

## எதிர்மறையான (Negative) உணர்வுகளை எவ்வாறு குறைக்கலாம் அல்லது அகற்றலாம்?

- உணர்ச்சிவசப்பட்டுச் செயலில் இறங்காது மனச் சாட்சியின்படி செயற்படப் பழக வேண்டும். 2 H இலிருந்து 3 H க்கு மாறவேண்டும்.
- எழும் உணர்ச்சிக்கு எதிரான சிந்தனையைக் கிழப்புதல். உ –ம் :– வெறுப்புக்கு பதிலாக அன்பு.
- தன்னம்பிக்கையை வளர்ப்பதன் மூலம்
- எதிர்மறையான உணர்ச்சியை எழும் பொழுதே அகற்றிவிடவேண்டும்.
- எப்பொழுதும் எழும் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் சாட்சிநிலையில் அவதானிக்க வேண்டும்.
- சுவாசத்தை ஒழுங்குபடுத்துதல்
- மற்றையோரின் நலனுக்காகப் பிரார்த்தித்தல்.
- பரந்த மனப்பாங்கு அல்லது இதயம் வேண்டும். **உ + ம் :–** பெரிய யானை சிறு குளத்தில் இறங்கினால் குளம் கலங்கும். பெரிய குளத்தில் இறங்கினால் குளத்தின் அமைதி குலையானது.
- மனஉறுதியை வளர்த்தல். (ஆசைகளுக்கு வரம்பு வைத்தல்)

- ❖ எறும்பை நினைவில் கொள்ள வேண்டும். அதன் விடாமுயற்சி, தூரநோக்கு, தன்னாலே செய்யக் கூடிய அளவுக்கு, தடைகளைக் கையாளும் தன்மையைப் பெறவேண்டும்.
- ❖ எவ்வளவோ குறைபாடுகளிலிருந்தும், அரிய சாதனை படைத்த உன்னத மனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படிக்க வேண்டும்.
- ❖ மனதுக்குள் ஆழமாகப் போகத் தெண்டிக்கவேண்டும்.
- ❖ கட்டுப்பாடுடன் வாழவேண்டும். உணவு, அப்பியாசம், சுவாசம், பேச்சு சிந்தனை ஆகியவற்றில் கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

இளைஞர்கள் ஏனைய நாட்டு இளைஞர்களைப் போல வாழ முற்படுவதும், சந்தையில் வரும் அதி நவீனப் பொருட்களுக்கு ஆசைப்படுவதும், தொழில்முன்னேற்றம், சுகவீனம் ஆகியவையே அவர்கள் எதிர்நோக்கும் சவால்களாகும். இத்துடன் இலட்சியத்துடன் செயற்படும் வன்முறை இயக்கங்கள் இளைஞர்களை இழுப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளார்கள். இதுவும் இளைஞர்களுக்கு ஒரு சவாலாகும்.

## மூத்த அங்கத்தவர்கள் அறிய வேண்டியவை.

இளைஞர் சக்தி மிகவும் அபாரமானது. இதைச் சரியான முறையில் இயங்க வைக்க உதவி செய்ய வேண்டும். இளைஞர்கள் பிழைவிடுதலும், பிழையான அபிப்பிராயம் கொள்வதும், ஆட்களைத் தமது கருத்துக்கு திரட்டுவதும், இயற்கையான இயல்புகளாகும். இளைஞர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொதுவுடமை ஒன்றுகூடும் உணர்வு, பிரசாரத்தால் கவரப்பட்டு, அதனால் திசைதிருப்பப்படும் பாங்குகளாலும் பாதிக்கப்படுகிறார்கள். மூத்த அங்கத்தவர்கள் இளைஞர்களின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்திருக்க வேண்டும். அவர்களின் பிழைகளை மன்னித்துத் திருத்தும் அன்பான இதயம் இருக்க வேண்டும். பொறுமையும், நகைச்சுவையும் இருக்க வேண்டும். சமூக ஊழல்களுக்கு மூத்தவர்களே காரணம். நாம் உன்னத முன்மாதிரியாகத் திகழ வேண்டும். **மூத்தவர்கள் பிழைவிடும் பொழுது, இளைஞர்கள் என்ன அணுகுமுறையைக் கையாளவேண்டும்?:**

முதலாவது சரி, பிழை, நன்று தீயது எல்லாம் காலம், இடம் சந்தர்ப்பத்தால் வேறுபடுமென்பதைத் தெரியவேண்டும்.

தீவிர ஆய்வுக்குப் பின்பே முடிவுக்கு வரவேண்டும்.

பிழையை மிகப் பணிவுடனும், நல்ல யுத்திகளைக் கையாள்வதன் மூலமும் சுட்டிக்காட்ட வேண்டும். **உ+ம்:-** நச்சிக்கேத்தா.

முதியோர்கள் நன்னடத்தையைப் பின்பற்ற வேண்டும்.

இருசாராரும் ஒன்று சேர்ந்து புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். இளைஞர்கள் வருங்காலத்தில் தலைமைப் பதவிகளை எடுத்து சிறப்பாகச் செயற்படுவதற்கு மூத்தவர்கள் பயிற்சி அளிக்க வேண்டும்.

**தமிழாக்கம்**
**ஆசிரியர்.**

*ஜெய் சாயி ராம்.*

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# தன்னம்பிக்கை

இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை முக்கியம். இது இல்லையெனில் விரக்தி ஏற்பட்டு மனநிலை பாரதூரமாகப் பாதிக்கப்படலாம். அநேகருக்கு இயல்பாகவே இது ஓரளவாவது இருக்கின்றது. ஆனால் சவால்களை எதிர்நோக்கும் பொழுதும், தோல்விகளை ஏற்கும் பொழுதும், புறச்சூழல் உகந்ததாக இல்லாதபோதும், தன்னம்பிக்கை தளர்வடையலாம்.

தன்னம்பிக்கைக்கு ஆதாரம் இறைநம்பிக்கையென்றே பகவான் பலதடவை கூறியுள்ளார். இறைநம்பிக்கை எவ்வளவுக்குள்ளதோ அவ்வளவுக்குத் தன்னம்பிக்கை இருக்கும். நாம் ஏதோ ஒரு மகாசக்தியின் பக்கம் சாய்ந்து இருந்தால்தானே தன்னம்பிக்கையிருக்கும். உடற்பலம், புத்திப்பலம், பொருள்பலம், குடும்ப சமூக இனப்பலத்தில் தங்கியிருந்தால் தன்னம்பிக்கை தளர்வடையலாம். ஆத்ம பலத்தில் தங்கியிருந்தால் தன்னம்பிக்கை தளர்வடையாது.

பெரிய சாதனைகள் அல்லது திட்டங்களைச் செயற்படுத்த முன்பு தன்னால் இயலுமான அளவு செய்யக்கூடியதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இச் சிறிய செற்பாடுகளில் வெற்றிகளைக் காணத் தன்னம்பிக்கை வளர்ந்துவிடும். பெரிய சமுத்திரத்தை நீந்துவதற்கு முன்பு சிறிய குளங்களில் நீந்தத் தெரியவேண்டும். படிப்படியாக பெரிய சாதனைகளை ஏற்றுக் கொள்ளலாம்.

பின்னடைவுகள், தோல்விகளினால் கிடைத்த பாடம், அனுபவத்தை மனதில் கொண்டு அவற்றை வெற்றியின் படிக்கற்களாக அனுசரிக்க வேண்டும்.

நாம் தெய்வீகமானவர்களே என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். நாமஸ்மரணை, பிரார்த்தனை, ஜெபம், சேவை, சத்சங்கம் ஆகியவற்றின் மூலம் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளலாம்.

சவால்களை ஏற்று வாழ்க்கையில் வெற்றி கொண்டோரின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்து உற்சாகம் கொள்ள வேண்டும்.

இறைவன் தந்துள்ள எத்தனையோ ஆற்றல்களை வசதிகளை நினைத்து நேரான எண்ணங்களால் மனதை நிரப்பிக் கொள்ள வேண்டும்.

'தன்னம்பிக்கையென்ற அத்திவாரத்திலே, சுயதிருப்தியென்ற சுவர்களை எழுப்பி, தியாகம் என்ற கூரையைப் போட்ட வீட்டில் முக்தி என்ற ஞான ஒளியைக் காணலாம்.' இது பகவானின் கூற்று.

**சிறு வெற்றிகள் பெரு வெற்றிகளுக்கு வழிகோலும்.**

*ஜெய் சாயி ராம்.*

**ஆசிரியர்.**

நன்றி :- Helpline on the Sathya Sai Path
by . B.N. Narasimha Murthy.
Warden Brindavan Hostal.

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# பாலவிகாஸ் பாடத்திட்டத்தின் தத்துவம்

- குழந்தைகளின் நல்ல தன்மைகள் **காட்டிக் கொடுக்கப்படுகின்றன.**
- அவர்களின் தெய்வீகத் தன்மை **ஞாபகப்படுத்தப்படுகின்றது.**
- இயற்கையுடன் அவர்களுக்குள்ள தொடர்பும் அதன் தெய்வீகத்தன்மையும் **பதியவைக்கப் படுகின்றது.**
- பிஞ்சு உள்ளங்கள், அன்பின் சூழலில் தெய்வீகத் தலைவர்களால் **வளமாக்கப்படுகின்றது.**
- சரியான முறையில் தங்கள் **வாழ்க்கையைப் பார்க்கப் பழகுகின்றார்கள்.**
- உலகத்திசை திருப்பிகள் வலுவாக ஆட்கொள்ள முன்பு சரியான பாதையில் பயணிக்கப் **பயிற்றப்படுகிறார்கள்.**
- ஐந்து மனித மேம்பாடுகளின் பரிணமிப்பால் **பலப்படுத்தப்படுகிறார்கள்.**
- உலகத் திசை திருப்பிகளால் தாக்கமடையாது (துடுப்பூசி போல) **பாதுகாக்கின்றது.**

**மு.க.சிவபாதவிருதையர்.**

**பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும்............**

*இன்றைய நிலை விநோதமாக உள்ளது. மமநாங்கள் எப்போதும் உண்மை பேசவேண்டும்டு என்று கற்பிக்கிறோம். வீட்டில் தொலைபேசி அழைப்பு வருகிறது. மாணவன் எடுக்கிறான். தந்தையாருடன் பேச வேண்டுமென்று கேட்கப்படுகிறது. தான்வீட்டில் இல்லை என்று கூறும்படி தந்தையார் கேட்கிறார். உண்மை பேசவேண்டும் என்று கூறும் தந்தையார் பொய்கூறும்படி தமது பிள்ளைக்கு பணிக்கிறார். உங்கள் கற்பித்தலும் முற்றிலும் முரணான வகையில் கற்பித்தல் இடம்பெறுகிறது. மாணவரைக் கெடுப்பதற்குப் பெற்றோரே உண்மையிற் பொறுப்பாளியாகின்றனர்.*

*சிலபெற்றோர் அதிகளவு போகங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டுகின்றனர். எல்லாப் போகங்களையும் வழங்குகின்றனர். அவர்களது தேவைக்கு அதிகமான அளவு பணத்தைக் கொடுக்கின்றனர். சிறுவயதிலிருந்தே குழந்தை வீண் விரயம் செய்யும் பழக்கத்தை மேற்கொள்கிறது. கெட்டபழக்கங்களையும் பழகிக் கொள்கிறது. பிள்ளைகளின் தன்மைகள் அனைத்திற்கும் தாமே பொறுப்பு என்பதைப் பெற்றோர் மறந்துவிடக்கூடாது.*

*ஆசிரியரும் தமக்குரிய புனிதமான பாத்திரத்தையும் பொறுப்பையும் எப்போதும் மனத்தில் வைத்திருக்கவேண்டும். ஒரு குழந்தை கூடாதெனில் எல்லோரையும் அது பாதிக்காது. ஆனால் ஒரு ஆசிரியர் தவறிழைத்தால் அனைவரையும் அது பாதிக்கும். ஆயிரக்கணக்கான பிள்ளைகளை அது பாழாக்கும்.*

- பாபா -

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# அன்புத் தெய்வம் சாயிமாதா

## பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

கிருஷ்ண பரமாத்மா நல்லோரைக் காத்து, தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதன் பொருட்டு யுகங்கள் தோறும் அவதரித்தார். மச்ச அவதாரம், கூர்மஅவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமனஅவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராமன் கண்ணன் அவதாரம், பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரம் அதர்மத்தை அழித்து, புவியைக் காக்க இனி எடுக்கவிருக்கும் அவதாரம். ஸ்ரீ கிருஷ்ணவதாரம் கடைசியாக நடந்தது. ராம அவதாரமும், கிருஷ்ணவதாரம். சிறப்பும் பெருமையுமுடையது. அசுரர்களின் கொடுமைகளையும், அட்டூழியங்களையும் பொறுக்கமுடியாத பூமித்தாயின் கண்ணீரைத்துடைக்க, பூபாரம் குறைக்க ஆதிபரமபுருஷர், பகவான் கிருஷ்ணர் தானே நேரில் பரிபூரண அவதாரமாகப் பூமிக்கு வந்தார்.

அவதாரங்களில், மனித குலத்திற்கு அர்த்தம் நிறைந்த அவதாரமாக இருப்பது இராமயணக்காவியத்தின் நாயகன், மனிதருள் தெய்வமாகத் திகழ்ந்த உத்தம புருஷன் ஸ்ரீ ராமமனின் அவதாரம். ஒழுக்கத்தோடு வாழ வேண்டிய வழிமுறைகளை வாழ்ந்துகாட்டி, காலத்தால் அழியாத உயர்ந்தவாழ்க்கைத் தத்துவங்களை உலகுக்குச் சொன்னவர், ஸ்ரீ ராமச்சந்திரர் தனது ஈசுவர அம்சத்தை மறைத்து, மனிதனைப் போல் நடித்தார். லட்சிய புருஷனாக வாழ்ந்து காட்டினார். தர்மமாகவே வாழ்ந்து, தர்மத்தைப் போற்றிக் கடைப்பிடித்து, தர்மத்தைப் போதித்து, தர்மத்தை நிலைநாட்டினார். ராமனின் தாயன்பு, தந்தையன்பு, உறவினர் அன்பு, ஏகபத்தினிவிரதம் முதலியவைஎல்லாம் நாம் நம் வாழ்க்கையில் பின்பற்றத்தக்கவை. அவருடைய சரித்திரம் முழுவதும் பின்பற்றத்தக்கது. கிருஷ்ணனின் சரித்திரம் சிந்தனை செய்து அதில் ஒன்றிப் போய்விட வேண்டும். ராமன் செய்ததை நாம் செய்ய வேண்டும். கிருஷ்ணன் சொன்னதைத்தான் நாம் செய்ய வேண்டும்.

உலகம் தோன்றிய காலத்திலிருந்தே தெய்வபுருஷர்கள், மகான்கள், ஞானிகள், அருளாளர்கள் எல்லாம் மக்களை நல்வழிப் படுத்துவதற்காக, பிரபஞ்சச் சேற்றில் அமிழ்ந்து போகாதிருக்க, பிறவிப் பெருங்கடலிருந்து கரைசேர்க்க, அஞ்ஞான இருள் அகற்றி மெஞ்ஞானத்தை உணர்த்த புவியில் அவதரித்திருக்கிறார்கள். சித்தர்கள், யோகிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எல்லாம் நாம் இறைவனை அடைய வழிகாட்டியுள்ளார்கள். அந்த வகையில் நாம் வாழும் காலத்திலே கண்கண்ட தெய்வமாக பகவான் ஸத்ய ஸாயி பாபா அவதரித்துள்ளார். ஜீவ குலத்தை தேவநலத்தில் சேர்க்க வேண்டுமென்ற தூய அன்பால்தான் மகாபுருஷர்கள், அவதாரர்கள் அவனியில் தோன்றுகிறார்கள். அவதாரத்துக்கு ஆதார காரணமே உயிர்க்குலத்தின் பால் பரமாத்மாவுக்கு உள்ள அன்புதான். நமது அவதார புருஷர் ஸத்ய ஸாயிநாதன் வாழ்வதே அன்புக்காகத்தான். அன்பு புரியத்தான் அன்பிலேமக்களையும் தேர்ச்சி பெறச் செய்வதற்காகத்தான் அவரது சிந்தனை யாவும் அன்பில் திளைத்தனவே. அவர் செய்வதெல்லாம், சொல்வதெல்லாம் அன்பினால்தான் அற்புதம் செய்வது அன்புரு வழியில் மக்களை இழுப்பதற்காகத்தான். அறிவுபதேசம் செய்வது அன்புருவங்களாக மக்களை ஆக்குவதற்குத்தான். அவர் அன்புத்தாய். ப்ரேமகாந்தன். ப்ரியக்குழந்தை. பரிவுகுரு. உற்ற உறவினர். நேச நண்பர். பாச

தாஸர். இந்த மானுட ஸாயியின் மாண்புகளை மாதுர்யத்தை உரியபடி புரிந்து கொண்டு ரஸித்துக்களிப்புறவேண்டும். அற்புதராய் விஞ்சை புரியும் ஆற்றல் ஸ்வாமியையும், உபதேசிக்கும் அறிவுஸ்வாமியையும் போற்றும் அளவுக்கு, மானுடமாய் நம்மிடை வாழும் அன்புஸ்வாமியை உலகம் அறிந்து போற்ற வேண்டும்.

''பத்துடை (பக்தியுடைய) அடியவர்க்கு எளியவன்'' என்று ஆழ்வாரும், ''ஈறிலாத நீ எளியையாகிவந்து ஒளிசெய் மானுடமாக நோக்கி'' என்று மாணிக்கவாசகரும் கூறிய எளிய மானுட அழகை ப்ரேமாவாதாரியான ஸ்ரீ சாயி எப்படி எல்லாம் மிளிர்விக்கிறார்.

ஸ்வாமி அசட்டுக் குழந்தைகளான நமக்கு அன்புத் தயாகவே இருக்கிறார். அடியார்களுடைய பரமசோகத்திலே அவரைப் போல் ஆறுதல் அளிப்பவரில்லை. நம்கர்மாவுக்காக நம்மைப்புடம் போட்டு அந்த தோஷத்தை அகற்ற வேண்டும் என்ற அன்பினால், தவறுகளுக்காக நம்மைத்தண்டித்துத் துலக்கும் அன்பினால் தான், நம்மை எண்ணாதது போன்றும், நாம் வேண்டுவதைச் செய்யாமலும், நம்மிடம் ஒரு வார்த்தையும் சொல்லாமலும் நடப்பது எல்லாம் மறக்கருணையினால் தான். ஸ்வாமி செய்யும் செயலும் எண்ணமும் எல்லாம் அன்பே.

அனைத்துயிரிடமும் அன்பு பயின்று, அவற்றுக்குக் காரணனான ஈசனிடம் பிரேமை புரிந்தால் ஏக ஆன்மாவிலேயே ஒன்றுகின்ற அத்வைத முக்தி பெறலாம் என்பது தான் ஸாயிசித்தாந்தம். பரமனிடம் பக்தியாகவும், ஜீவர்கள் பால் தொண்டாகவும் உருவெடுக்கும் அன்பினும் பெரிய ஆன்மஸாதனையில்லை என ஸ்வாமி நாளும் ஓதுவார். அனைத்து உயிர்களுக்கும் மகுடமாயிருப்பது அன்பே. அதுவே உயிர்கள் பரிபூர்ணத்துவம் அடைய வழியுமாகும். தெய்வத்தினுடைய ஆத்மப் பேரானந்தத்தின் ஆற்றலும், உணர்ச்சிவேகமும் அன்பே! ஆகையால் ஆண்டவனை அன்பு மார்க்கத்தில் அணுகுவதே அதி உச்சமான ஆன்மீக நிறைவுக்கு ஒருவரைத் தயார்படுத்துவதாகும். அன்பினால் பெறும் அந்த அதி உச்சம் அத்வைத சாந்தியே என்பது அன்பவதாராஸாயி, பர்த்திபதியின் உபதேசம்.

பிரேமாவதாரன், சாயிராம் நம்மை நாளும் கவனித்துக் காக்கவே வந்த அன்னைத் தெய்வம். அடியார்கள் அவரை பாபா பகவான், ஸாயி என்பதையெல்லாம் விட ஸ்வாமி என்று குறிப்பிட்டே வாயும், மனமும் இனிக்கிறார்கள். அதில் தெய்வீக உயர்வு, இனிமை நெருக்கம் இரண்டும் காணலாம். அவரது ப்ரேமை எளியது, இனியது. குறைதீர்க்கும் குணக்குன்று நம் பகவான், ஒரு பிள்ளையின் தாய் அவன் மனைவிக்கு மாமியாராகிறாள். தாய்மையின் எதிர் துருவங்களாக இருக்கும் மாமிமாருமுண்டு. ஸ்வாமி 'மதர் - இன் - லோ' என்பவர் 'மதர் - இன் - லவ்' ஆக இருக்க வேண்டுமென்பார். அவரருளாலே அன்பில் அம்மாவாக இருக்கும் மாமியார்களும் உள்ளனர். எத்தனையெத்தனையோ இருட்குகையுள்ளங்களில் முழுமதி ஒளியைப் பொழிந்துள்ளார் நம் அருளாளர் ஸ்வாமியின் அன்பு லீலைகள் எத்தனை! எத்தனை!

*அன்பே சிவம்.*

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலர்
அன்பே சிவமாததாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே.

**சரணம் சரணம் சாயி**

**சாஷ்டாங்க சரணம் சாயி.**

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்,**
**சித்தாங்கேணி.**

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# மனிதனும் தெய்வமகலாம்

உலகம் பஞ்சபூதங்களினால் ஆனது ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனித் தன்மை உண்டு. தீக்கு சுடும் தன்மையும் புளிக்கு புளிக்கும் தன்மையும் சீனிக்கு இனிக்கும் தன்மையும் இருப்பது போல் மனிதனுக்குள்ளே உரித்தான தன்மை மனிதத்தன்மையாகும். இதற்கு அடுத்த படிதான் தெய்வீகத் தன்மையாகும்.

எண்ணம் சொல் செயல் ஒன்றாக இருப்பவனே மனிதத் தன்மை உடையவராவன். மனிதன் சம்பாதிக்க வேண்டியது பணமோ புகழோ அல்ல. முதலில் சம்பாதிக்க வேண்டியது மனிதத் தன்மையாகும். மனிதனுக்கு மூன்று குணங்கள் உண்டு. அவன் அக் குணங்களைப் பயன்படுத்தி நல்ல வழியில் வாழவேண்டும்.

ஒவ்வொரு மனிதனுள்ளும் ஆத்மஞானம், அத்வைத ஞானம், பிரம்ம ஞானம் உண்டு. அவையனைத்தும் நமக்குள்ளேயே உள்ளன. ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் தன்னிடம் உள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்தலாம். அதற்குதான் சுவாமியும் அவதாரம் எடுத்துள்ளார்.

**முதலாவதாக** நமக்கு யார் எதிரி என்று பார்ப்போமானால் ஆசைதான் நமது முதல் எதிரி. ஆசைநிறைவேறாதபோது அது நம்மை அடுத்தபடியான குரோதத்துக்கு இட்டுச் செல்கின்றது. குரோதம் நம்மை தீயபாதையை நோக்கிச் செல்ல வைக்கின்றது. உலகம் எங்கும் மண் நிறைந்து இருக்கிறது. அதற்கு எந்த மதிப்பும் இல்லை. ஆனால் தங்கத்துக்கு விலை மதிப்பு அதிகம். அதுவும் மண்ணில் இருந்து கிடைப்பதுதானே. அதுபோல தெய்வீகத்தை உணர்ந்தவர்களுக்கு அதை செயல்படுத்துபவர்களுக்கு மதிப்பு அதிகம். நன்மை, தீமை, மதிப்பு, அவமரியாதை இவை அனைத்தும் மனிதர்களின் செயல்தான். நீ தெய்வத்துவமானவனாக மாற வேண்டுமானால் நல்ல செயல்களிலும், சேவையிலும் ஈடுபடவேண்டும்.

நம் நவடிக்கைதான் நமக்கு கௌரவத்தையும், அவமதிப்பையும் அளிக்கின்றது. நம் கடமையை நாம் சரியாகச் செய்யாவிட்டால் நமக்கு அவமரியாதை உண்டாகிறது. உடலுக்கு எந்த மதிப்பும் இல்லை. ஆனால் உடலுக்குள் உண்டாகும் எண்ணங்களுக்கு மதிப்பு உண்டு. ஒவ்வொருவருடைய படிப்புகளுக்கு கௌரவம் கிடைப்பதில்லை. எங்கள் நடத்தைக்குத் தான் உண்மையில் கௌரவம் கிடைக்கின்றது. என் நடத்தை ஒழுக்கத்துடன் இருக்கும் போது கௌரவம் கேட்காமலேயே கிடைக்கின்றது.

**இரண்டாவதாக** மனிதன் தெய்வீகத்தை அடைய சேவையில் ஈடுபடவேண்டும். எனக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு அதற்கு மேல் இருப்பதை அடுத்தவருக்கு அதாவது தேவையானவருக்கு கொடுக்க வேண்டும். அதை மன நிறைவுடன் கொடுக்க வேண்டும்.

தனம் இருந்தும் தானம் செய்யாதவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். தியாகம் என்பது அவசியம். இறைவனிடம் நெருங்க தெய்வீகத்தை உணர சுமையைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். வயது ஏற ஏற ஆசைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நமது ஆசைகளே நம் அமைதியின்மைக்கு மூலகாரணம். நாம் செய்யும் சேவையே நம்முடைய அமைதிக்கு அவதாரம். மற்றவர்களுக்கு செய்யும் சேவையை திரிகரண சுத்தியுடன் செய்ய வேண்டும். அன்புடன் சேவை செய்யுங்கள். அது எம்மை தெய்வீகத்தை நோக்கி அழைத்துச் செல்லும். தெய்வம் ஒன்றே எல்லோரிடமும் அந்தராத்மாவாக இறைவன் வசிக்கிறான் என்ற எண்ணத்துடன் சேவை செய்ய வேண்டும்.

**மூன்றாவதாக** அன்பு. மனிதன் முதலில் மனிதனாக வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனுக்கு அடையாளம் எல்லோரையும் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். சுவாமி கூறுகின்றார்.:

பட்டை தீட்டும் போது தான் வைரத்தின் மதிப்பு அதிகரிக்கின்றது. துன்பத்திற்கிடையே தான் ஆன்மீக சாதனைகளுக்குப் பிறகுதான் தெய்வத்துவம் வெளிப்படும். இறைவன் அன்பே வடிவானவர் அன்பு நிறைந்திருந்தால் தான் பேதங்கள் விலகும். மனிதன் மற்றவர்களைத் தனக்காகவே நேசிக்கிறான். மற்றவர்களுக்காக அல்ல. கடவுளையும் தனது நன்மைக்காகவே நேசிக்கிறான். எல்லாம் நமக்குள்ளேயே உள்ளது. உள்ளார்வத்துடன் முயற்சி செய்தால் அவை வெளிப்படும் அன்பும் நமக்குள்ளேயே உள்ளது. அதை எல்லோரிடமும் பரவச் செய்வது எமது கடமை. அன்பு தன்னலமற்றது. அன்பு வழங்கியும் மன்னித்தும் வாழ்வது என்று சுவாமி கூறுகின்றார். அன்பானது மற்றவரைத் தன்னிடமிருந்து வேறாகப் பிரித்துக் கானாது.

வாழ்க்கையில் இன்பம் துன்பம் இரண்டையும் மனிதம் சமமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். சாந்தி ஆனந்தம் இவை இரண்டும் வேறுவேறல்ல. ஒன்றினுள் மற்றொன்று இருக்கிறது. நல்லது தீயதாக மாறுகிறது. தீயவை நல்லதாக மாறுகின்றது. இரண்டையும் ஒரே மன நிலையில் அனுபவிப்பதே தெய்வீகமாகும்.

படைக்கப்பட்ட உயிரினம் அனைத்திலும் பார்க்க மனிதனிடம் மட்டும் தனிச்சிறப்பியல்பாக இருப்பது அவனது விவேகம் ஆகும். அவனது பகுத்தறியும் ஆற்றலாகும். **ஆகவே** அடுத்ததாக தெய்வீகத்துக்கு கொண்டு போய் சேர்ப்பது. இறை நாமம். இனிமையாக புனிதமாக இருப்பது இறைவனின் திருநாமம். எல்லா நேரங்களிலும் இறை நாமத்தை ஈடுபாட்டுடன் சொல்லுவோம். மலையாகக் குவிந்துள்ள பாவங்களை தான் தூளாக்கும் இடியாகும் இறைவனின் நாமம் என்கிறார்கள் சான்றோர்கள். உதய சூரியனைப் போன்றது இறைநாமம். அது இருளை இல்லாது செய்கின்றது. இறைநாமம் அசுர இயல்பைக் கூட மாற்றும் சக்தியுள்ளது.

அன்பை வளர்ப்பது இறைநாமம். அன்பு வளர்ப்பதன் மூலம் தெய்வீகத் தன்மையை இலகுவில் அடையலாம். நதிகள், கடலுடன் கலந்து விட்டதும் அவற்றின் பெயர்கள் மறைந்து விடுகின்றன. அதேபோல் தனிமனிதன் என்ற உணர்வு உள்ளவரை மனிதத் தன்மைதான் இருக்கும். இறைவன் ஒருவனே எல்லாவற்றிலும் உள்ளான் என்ற உணர்வு வந்தால் தெய்வத்துவத்தை அடையலாம். அனுபவ அறிவே தெய்வீகப் பாதையாகும். இதயத்தின் குரல் தான் மனச்சாட்சி. அதைப்பின் பற்றுங்கள்.

மனச் சாட்சியாக இயங்கும் ஆத்மாவின் குரலே உண்மையானது. அதன்படி சாதனை செய்வதே தெய்வீகத்தை நோக்கிய பயணம் ஆகும்.

எல்லாவற்றையும் தெய்வார்ப்பணமாகச் செய்ய வேண்டும். நாமே நமக்குள் வேற்றுமைகளை வளர்த்துக் கொள்கிறோம். நமது வாழ்க்கையை நாமே வீணடிக்கின்றோம். மனிதன் மற்றவர்களின்மேல் ஆதிக்கம் செலுத்துகின்றான். ஆனால் நம்மாகி நம்மனத்தின்மேல் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. அதனால் நாம் துன்பங்களை அனுபவிக்கிறோம். காண்பதெல்லாம் இறைவன் வடிவம் என்று எண்ணினால் ஆனந்தத்தை அடையலா். தெய்வத்துவ உணர்வுடன் பார். அப்போது தெய்வீகத்தை உணரலாம்.

சுயநல உணர்விலிருந்து தெய்வத்துவ உணவுடன் நேர்வழியில் நடக்கும் போதுதான் ஆத்மாவைப் பற்றி உணர முடியும். அந்த தெய்வீகத்தை அடைய முடியும். சுயநலத்தை கொன்றுவிடுங்கள். கடவுளிடம் பற்றுதலை வளர்த்துக் கொள்ளுங்கள். செய்வதனைத்தையும் அந்த இறைவனுக்கே அர்ப்பணியுங்கள்.

**திருமதி. சத்தியா புகேந்திரன்,**
**திருகோணமலை.**

## நான் உங்களது தொண்டன்

*"நான் எப்போது அனைத்துக் கவலைகளிலிருந்தும் விடுதலை பெற்று, ஓய்வடைந்து திருப்தி பெறுவேன என உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் அனைவரும் எப்போதும் மகிழ்வுடன் ஆன்மீக சிந்தனையில் செவழித்தபடி தன்னலமற்ற சேவைக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் காலத்தில் தான் அது நிகழும். உங்கள் அனைவரினதும் நல்வாழ்விற்காகத்தான் நான் எப்போதும் அயராமல் ஏதாவது செய்தபடி இருக்கிறேன். நான் எதுவுமே செய்யாமல் இருந்தாலும், என்னை யாரும் எந்தக் கேள்வியும் கேட்கப் போவதில்லை. எனக்கு எனது தேவைக்காக, சொந்தமாக எதுவுமே தேவைப்பட இல்லையாதலால், நான் எதனையும் இதனால் இழக்கப் போவதில்லை. எனக்கு உங்களின் மேல் உள்ள அன்பினால் அயராத உழைப்பில் நான் என்னை எப்போதும் ஈடுபடுத்தியபடி இருக்கிறேன். இவை அனைத்தும், உங்களை எனது சுய எடுத்துக்காட்டின் மூலம் வழிநடத்தவும், தேவையான அளவு உற்சாகத்தையும், ஊக்கத்தினையும் கொடுத்து, நீங்கள் தெய்வீகத்தன்மையை அடைய ஆர்வத்தினை உங்களுக்குள் ஏற்படுத்துவதற்குமே ஆகும். நீங்கள் அனைவரும் உங்களை எனது தொண்டர்களாகக் கருதுகிறீர்கள். ஆனால் உண்மையில் நானே உங்களது தொண்டன்.*

- பாபா -

"அன்பே எனது வடிவம்"

என்ற நூலிலிருந்து.......

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# ஒரு சாயி சேவகனின் தன்மை

**(பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா எழுதிய கடிதங்களின் தொகுப்பான "Divine Whispers" என்ற நூலிலிருந்து ஒரு கடிதம் மொழிபெயர்ப்பு.)**

**குழந்தாய்,**

எனது ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள். உனது கடிதம் மற்றும் சுற்றறிக்கை மூலம் பக்தர்களுக்கு நீ எழுதிய அறுவுறுத்தல்கள் என்னிடம் வந்தடைந்தன. பணிகள் வளர்ச்சியடைந்து முன்னேறுவதில் திருப்தியடைகிறேன். உனது உடல் நலமும் ஊக்கமும் மகிழ்ச்சி தருகிறது.

குழந்தாய்! குற்றங் குறைகளைக் குறிப்பிட்டுப் பகிரங்கப்படுத்துவது புத்திபூர்வமான செயலல்ல. நேராக இல்லாமல் சுற்றிவளைத்துக் கையாளப்பட வேண்டிய விடயங்கள் இவை. மனிதர்களிடமுள்ள நல்ல அம்சங்களை உயர்த்திக் காட்டுவதன் மூலம் திருந்துவதற்கு அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டும். ஏனெனில் அந்த நற்பண்பே தீய வழிகளில் செல்லும் மற்றவர்களையும் வெட்கமடையச் செய்து அவ்வழிகளிலிருந்து விலகச் செய்யும்.

நல்வழிகளில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நாங்கள் வளரச் செய்யும்போது தப்புச் செய்பவர்கள் கூட சரியான பாதைக்கு வந்து சேருவார்கள். ஒருவருடைய குணஇயல்பிலுள்ள ஏதும் ஒரு குறையைக் குறிப்பிட்டு அதன்மீது அவதானத்தை ஈர்ப்பது தேவைக்கு அதிகமான முக்கியத்துவத்தை ஒரு ஆளுக்குக் கொடுப்பதாகும். அது தொடர்பில் நாங்களும் முன் சார்பாக நடந்துகொண்டதாக தப்பாகப் புரிந்து கொள்ளப்பட்டு அவதூறு செய்யப்படுவோம்.

அன்பு, சேவை, சகோதரப் பண்பு போன்ற நம்பிக்கை தரும் நற்குணங்கள் நல்லெண்ணங்களைப் பக்தர்களிடையே அறிவுறுத்தி வருவோம். இவையே ஏனைய நிறுவனங்களிலிருந்து எங்கள் நிறுவனத்தைத் தனித்துக் காட்டும் அடையாளங்களாக இருக்கட்டும். விரும்பத்தகாதனவற்றிலிருந்து சந்தடியின்றி விலகி அவற்றைக் கண்டு கொள்ளாது திடமாக இருப்போம். அவற்றை விவாதிப்பதும் பகிரங்கத்தில் கண்டிப்பதும் எங்களையே கறைப்படுத்தும். தூய, தெய்வீக மயமான சூழலைப் பேணுவோம். அப்போது தீமை முளைக்கவோ தழைக்கவோ முடியாது.

இந்த வயதான காலத்தில் கூட நிறுவனத்துக்கு நீ கரிசனையோடும் ஊக்கத்தோடும் தொண்டு புரிவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. சாயி பக்தர்கள் வேலைகளைப் பகிர்ந்துகொண்டு ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தங்கள் குழுவினருக்கு அன்பு, தைரியம், துணிவு, தியாக உணர்வு ஆகியவற்றை அவர்கள் ஊட்ட வேண்டும். அந்தச் செய்தியானது மேன்மேலும் பலரைச் சத்தியத்தை நாடுபவர்களாக்கி அதன் சாதகர்களாக்கும்.

நிறுவனத்தின் வளர்ச்சிக்கான செயற்திட்டங்களை வெற்றிகரமாகத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன். இது விடயத்தில் நீ செய்துள்ளதும்,

செய்துவருவதும் எனக்கு மிகுந்த திருப்தியைத் தருகிறது. இப்போர்ப்பட்ட வெற்றிகரமான செயற்பாடுகள் நிச்சயமாக தடைகளையும், எதிர்ப்பார்ப்புகளையும் ஏன் அவதூறுகளையும் கூட எப்போதும் உண்டுபண்ணும். அவற்றில் கவனம் செலுத்த வேண்டாம். பலபல பட்டைகள் வெட்டப்படும் போது வைரம் மேன்மேலும் பிரகாசமடைகிறது. ஒருத்தரின் கடமை என்பது தான் தேர்ந்தெடுத்த பாதையில் தொடர்ந்து முன்னேறி தனக்குரிய பணியை ஆர்வம் குன்றாது செய்து முடிப்பதாகும்.

என்றைக்காவது ஒருநாள் சத்தியம் மதிக்கப்பட்டுப் போற்றப்படுவது தவறாது. எதுவும் நடக்கட்டும், எப்போதும் போல் ஆனந்தமாக இருக்கவும்.

*வீட்டிலுள்ள அனைவருக்கும், நிலையத்தினருக்கும்*

*எனது அன்பையும் ஆசியையும் தெரிவிக்கவும்.*

**அன்பும் ஆசீர்வாதமும்,**
**ஸ்ரீ சத்திய சாயி பாபா.**

*தர்மமும் அதர்மமும் மோதிக்கொள்ளும் குருஷேத்திரப் போர் முனையில் உலகம் இன்று மீண்டும் கலங்கிப் போய் நிற்கின்றது. அண்டத்தைச் சாடி, அணுவைப் பிளந்து அறிவியல் வளர்ச்சியில் அதீத வளர்ச்சி கண்டுள்ள மனிதனுக்கு, அமைதி, நிம்மதி என்பன கானல் நீராகிப் போய்விட்டது. போலி வாழ்க்கை விழுமியங்களாலும் ஆணவ அகங்கார முனைப்புகளாலும் உந்தப்பட்ட மனிதன் ஆத்மீகச் சீரழிவுக்குள்ளாகி, ஆனந்தம்குன்றி நிம்மதியைத் தேடி நாலாபக்கங்களிலும் சிதறி ஓடிக்கொண்டிருக்கிறான். அர்த்தமற்ற போட்டாபோட்டி, பூசல்கள் வஞ்சனைகள், கெடுபிடிகள், அற்புதமான மானுடப்பிறவியை அநியாயமாகச் சூறையாடிக் கொண்டிருக்கிறது. அவனுக்கு இன்று தேவைப்படுவதெல்லாம் நிஷ்களங்கமான நித்திய அமைதியும், சத்தியமான ஆனந்தமும் மட்டுமே!*

*"மானுடனே! உனக்குள்ளேயே நித்தியானந்தப் பெருஞ்சுடர் ஒளிரத்தக்கதாக கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும் மூடனைப் போல வீணே அலைவதேன்? உன் அகக் கண்ணை விழித்துப்பார். உன் சக மனிதரில் பரமனைக் காணப் பழகு"*

*என ஆறுதல் அளிக்கிறார் பகவான் பாபா.*

*"சாயி பாபா.... அவதாரங்கள்"*

*என்ற நூலில் இருந்து.*

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# சத்திய சாயி இளைஞர்களின் மூன்றாவது உலக மகாநாடு

## 26, 27, 28 ஜுலை 2007 - அறிக்கை

இம் மகாநாடு பிரசாந்தி நிலையத்தில் சாயி குல்வன்ட் *(Sai Kulwant)* மண்டபத்தில், பகவானின் முன்னிலையில் நடாத்தப்பட்டது. 86 நாடுகளிலிருந்து ஆறாயிரம் இளைஞர்கள் பங்குபற்றினர்கள். பகவானின் பல்கலைக்கழக மாணவர்களும், கன்னட மாநில சேவைப்பகுதி இளைஞர்களும் இதில் கலந்து கொண்டனர். இளைஞர் அணியின் மூத்த நிர்வாகிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். மண்டபத்தில் ஏனைய அடியார்கள் எஞ்சியிருந்த இடமெல்லாவற்றையும் நிரப்பினார்கள்.

26ம் திகதி விழாக்கிழமை காலை இளைஞர்கள் யாவரும் தத்தமது தேசத்தின் கொடியைப் பிடித்த வண்ணம் பகவானுக்கு மரியாதை அணி வகுத்தார்கள். அணிவகுப்பு முடிய 50 நிமிடங்கள் எடுத்தன. பகவான் மங்கள விளக்கேற்றி மகாநாட்டை ஆரம்பித்தார். சத்திய சாயி உலக ஸ்தாபனத்தின் தலைவர் ***Dr.* மைக்கல் கோல்ட்ஸ்ரைன்** ஆரம்ப உரை நிகழ்த்தினர். எவ்வாறு இலக்கண சாயி இளைஞராக இருக்கலாம்? எங்கள் முன் வீற்றிருக்கும் தெய்வத்தை எமது மனதில் ஏற்றி, அவருடைய போதனைகளை முக்கியமாக ''எல்லோரையும் நேசி, எல்லோருக்கும் சேவை செய்'' என்பதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலமே நீங்கள் இலக்கண சாயி இளைஞர்களாக வரலாம் என்று கூறி முடித்தார்.

பின்பு இளைஞர் அணியின் சர்வதேச இணைப்பாளரான **திரு.சித்து சுடசாமா** *(Mr.Shitu Chudasama)* உரை நிகழ்த்தும் பொழுது இளைஞர்கள் தமது உண்மையான இயல்பை அறிய முனையவேண்டுமென்றும், பகவானின் வாழ்க்கையைப் பற்றிப் படிக்கவேண்டுமென்றும் கூறினார். இளைஞர்கள் சாயி நிறுவனத்திற்கு உற்சாகம் சக்தி, ஆக்க முயற்சி ஆகியவற்றை ஊட்டப்பட வேண்டுமென்று சொன்னர். மேலும் இம் மகாநாட்டின் பிரதான நோக்கம் இளைஞர்களின் உட்பார்வையைப் பலப்படுத்தி அவர்களின் உள்ளங்களில் இறைவனைக்காண உதவி செய்வதேயாகும் என்று கூறினர். மகாநாட்டின் ஒழுங்கை ஒவ்வொரு கட்டத்திலும் கவனித்து உதவி செய்ததற்காக பகவானுக்கு நன்றி கூறினர். இளைஞர்களைத் தகுதியான புருஷர்களாக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, பகவான் இல்லாத வாழ்வு பிரயோசமனற்றதாகும். பகவானுடன் இசைந்த வாழ்வு முடிவில்லாத நம்பிக்கையான தொன்றாகும் என்று கூறி முடித்தார். இவ்வுரைகளின் பின்பு பகவானின் அருளுரை நிகழ்ந்தது. **பகவானின் ஆரம்ப அருளுரையிலிருந்து சில குறிப்புகள்:**

'' உலகமும் அதிலுள்ள அனைத்தும் பஞ்சபூதங்களால் ஆனவை. மனிதனின் அறிவு பெருகியிருந்தாலும் பகுத்தறிவு *(Discrimination)* சூனியமாக இருக்கிறதே! எது நல்லது? எது கெட்டது? எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக் கூடாது என்று தெரியவில்லை. தேகப் பற்றின்

நிமிர்த்தம் நான் என்னுடையது என்ற எண்ணங்கள் எழுகின்றன. நீ உடம்பல்ல, மனதல்ல, புத்தியல்ல, நீ, நீயேதான். பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கும் நான் *(I)* , தனி மனிதனில் இருக்கும் நான் என்பதும் வேறு. தனிமனிதனிலுள்ள நான் அகங்காரத்தையே குறிக்கின்றது. கடவுளின் நம்பிக்கை இருந்தால் அன்பு வெளிப்படும். அன்பிலிருந்து சாந்தி வெளிப்படும்.சாந்தி சத்தியத்திற்கு இட்டுச் செல்லும். இச் சத்தியமே கடவுள். அன்பே கடவுள். அன்புடன் வாழ். நேரத்தை வீனாக்காதே. கடவுளை அடைவது மிகவும் இலேசானது. அன்பின் மூலம் கடவுளை அடையலாம். அன்பு ஒரு மகா சக்தி. அதன் மூலம் எதையும் அடையலாம். பின்பு ஒரு முறை அன்பின் தத்துவத்தைப் பற்றி விளக்குவேன்'' என்று கூறி அருளுரையை முடித்தார்.

பகவான் மண்டபத்தைவிட்டு வெளியேறிய பின்பு மகாநாடு தொடர்ந்து நடைபெற்றது. **திருமதி மல்லிகா சிறினிவாசன்** *(Director, Tractors & Farming Equibmente Ltd) 5 D* களைப் பற்றி உரை நிகழ்த்தினர். இவரைத் தொடர்ந்து **திரு சஞ்ஜே சகானி** *(Mr. Sanjay Sahani - Principal Brindavan Campus)* உரை நிகழ்த்தினர். அவர் நாம் வாழும் காலம் பகவானின் வருகையினால் மகத்தானதென்றும், மனித மேம்பாடுகள் நலிவடைந்ததால் மிகவும் மோசமான காலமென்றும் குறிப்பிட்டார். நீர் யார் என்று வினவுவது தகவல் சேர்க்கையாகும். நான் யார் என்று வினவுவது உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும். *(Trans formation)* நல்ல எண்ணங்களே மனதில் உதிக்க வேண்டும். தீய எண்ணங்கள் உதித்தால் செயலாக மாறவிடக்கூடாது. எப்பொழுதும் சாயியின் மாணவனாகவே நாம் இருக்க வேண்டும் என்று கூறினார்.

பின்பு 20 நிமிடங்கள் வினாவிடை நிகழ்வு நடைபெற்றது. ''உலகப் பற்று ஏறினால் இறை பற்றுக் குன்றிவிடும். இறைபற்றுக் கூடினால் உலகப் பற்று குன்றிவிடும்''

''பகுத்தறிவு இரண்டு வகைப்பட்டது :-

*Individual Discrimination* - தனிநபரை மையமாகக் கொண்டிருப்பது.

*Fundamental discrimination* - எல்லோரின் நன்மையை மையமாகக் கொண்டிருப்பதாகும்.''

மேற் கூற்றுக்கள் கூறப்பட்டன.

பிற்பகல் சுவாமியின் உள் விளையாட்டரங்கில் இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்குமிடையே கூடைப்பந்தாட்டம் விளையாட்டு நடைபெற்றது. பகவான் விளையாட்டு வீரர்களையும், நிர்வாகிகளையும் ஆசீர்வதித்தார்.

27ம் திகதியன்று காலை தரிசனத்தின் பின்பு நாலு அன்பர்கள் உரை நிகழ்த்தினார்கள். முதலில் பகவானின் முன்னால் மாணவன் **செஷாமா ஷாம்** உரை நிகழ்த்தினார். அவரின் உரை ''மரம் உயர உயர வளர்ந்து வரும் பொழுது, வேர்கள் பெலமில்லாவிடில் சரிந்து விழுந்து விடும்''. ஆகவே எமது ஆன்மீக ஈடேற்றத்தில் ஐந்து மனித மேம்பாடுகளைப் பலமான அத்திவாரமாகப் போட வேண்டும். பிறந்ததன் நோக்கம் இனிமேல் பிறவாதிருப்பதற்காகவே. சாயி நிறுவனம் ஆற்றைப் போன்றது. அதில் துளிகள் தான் நாம். அந்த ஆறு பகவான் என்ற சமுத்திரத்தில் ஒன்றாகச் சங்கமமாக வேண்டும். பொஸ்னியாவில் கலவரம் நடந்த பொழுது பலர் அகதிகளாகினர். கிரேக்க அன்பர் அவர்களுக்காக உணவுப் பார்சல்கள் தயாரித்து அதில் சுவாமியின் படத்தையும் வைத்துக் கொடுத்தார். படத்தைக்

கண்டதும் "ஓ! இவர்தான் எங்களுக்கு கடந்த மூன்று நாட்களாக உதவி செய்தார்" என்று சொன்னார்கள். சாயி அடியார்கள் செல்ல முன்பு சுவாமி அவதிப் படுவோருக்காக உடனே செல்வார். சுவாமி தனக்கு நல்ல ஒழுக்கங்களையும், சகோதரத்துவத்தையும் தன்னலமில்லா சேவையையுமே காணிக்கையாகத் தருமாறு கேட்டுள்ளார். 74வது பிறந்த தின விழாவின் உரையில் எழும்புங்கள், நடவுங்கள், முன்னேறுங்கள் சங்கமமாகுங்கள் என்று சுவாமி சொன்னதை நினைவூட்டி உரையை முடித்தார்.

அடுத்ததாக **செல்வி அல்மா பேரா (ஆஜென்ரினா)** உரை நிகழ்த்தினர். ஒரு நேர்காணலின் போது சுவாமி தன்னை "சுவாமி!" என்று அழைத்ததும் தான் வந்து விடுவேன் என்று சொன்னதை அறிவித்தார். சாதனையில் முக்கியமானவை உணவும் கட்டுப்பாடேயாகும். சுவாமிக்கு அருகாமையில் செல்ல மற்றையோருக்குச் சேவை செய்யவேண்டுமென்று கூறி முடித்தார். பின்பு திரு **ஜெரமி ஹொவர்** *(Jeremy Hoffer - USA)* உரை நிகழ்த்தினர். 1995ம் ஆண்டு 18 இளைஞர்களுடன் நாடக நிகழ்வு நடாத்த வந்து, சுவாமி எவ்வாறு ஆதரவு அளித்தார் என்று குறிப்பிட்டார். மனதை வெல்ல சாயியின் போதனைகளில் மனதைச் செலுத்தவும். தன்னம்பிக்கை வளர்க்க சாயியில் தங்கியிருக்கவேண்டும். இருதயத்தில் ஒருவரே அமரலாம். உடல் சுவாமியின் வேலைக்கே தரப்பட்டது. புலன்கள் அன்புச் செயலை உணரவேண்டும். உரையின் முடிவில் சுவாமி தங்கச் சங்கிலியொன்றை சிருஷ்டித்து அவரின் கழுத்தில் அணிந்தார்.

இதன் பின்பு *Dr.* **சாமுவேல் சான்ட்வைஸ்** *(Dr. Samuel Sandweiss USA)* உரை நிகழ்த்தினர். நாம் அவரை இமைப் பொழுதும் மறவாதிருக்க வேண்டும். எமது மனோசக்தியை உள் நோக்கிப் பாயவிடவேண்டும். ஒரு முறை மிகவும் அழுக்குடன் தூர்நாற்றம் வீசும் நோயாளியைப் பார்க்கக் கூப்பிட்டார்கள். வந்திருக்கும் நோயாளி சுவாமிதான் என்ற எண்ணம் வந்ததும், அருவருப்பு எல்லாம் அன்பாக மாறியது. இப்படியான மனோபலத்தால் எனக்கு சுவாமியின் தரிசனம் ஒவ்வொருநாளும் போதியளவு கிடைக்கிறது. 2004ம் ஆண்டு எழுதி முடித்த எனது புத்தகத்தை சுவாமியின் காலடியில் சமர்ப்பிக்கிறேன். என்று சொல்லிச் சமர்ப்பித்தேன். அதற்குச் சுவாமி நீ எனக்குப் புத்தகம் தரவில்லை. நான்தான் உனக்குப் புத்தகம் தந்துள்ளேன். என்று கூறியதை எமக்கு அறிவித்து உரையை முடித்தார்.

**பின்பு திரு ந.நரசிம்மமூர்த்தி** *(Waraden Brindavan Hostel White feld)* உரை நிகழ்த்தினர். நாம் அன்பில் வாழ்ந்தால்தான் கடவுளுடன் சங்கமமாகலாம். அன்புக்காக ஆசை எழ வேண்டும். பின்பு அதை அடையவேண்டுமென்ற ஆவல் எழுந்து. அதை அடைய வேண்டும். இன்றைய உலகத்திற்கு சுவாமியின் செய்தி, கருணை, அன்பு மிகவும் அவசியமாகத் தேவை. மனம்தான் தடையாக இருக்கும். என்று கூறி முடித்தார். இதனைத் தொடர்ந்து ஆன்மிக வினா விடை நிகழ்வு நடந்தது.

**27ம் திகதி பிற்பகல் திருமதி பிலிஸ் கிறிஸ்ரல்** *(Mrs.Phyllis Krystel Germany)* அவர்களின் உரையுடன் நிக்ழ்வு ஆரம்பமாகியது. இவருக்குத் 90 வயதிருக்கும். குரல் மிகவும் மென்மையாக இருந்தது. ஒரு நேர்காணலின் போது சுவாமி "நீங்கள் நடமாடும் ஆலயங்கள். நீங்கள் எல்லோரும் கடவுளே" என்று கூறித் தன்னைப் பார்த்து எங்கே "நான் கடவுள்" என்று உரக்கக் கூறுமாறு சொன்னார். தானோ எவ்வளவு தயக்கத்திற்குப் பின்பு அச் சொற்றொடரைச் சொன்னதாக அறிவித்தார். எனது தயக்கத்திற்கு விளக்கம் தருவதற்காக சுவாமி "நான் உன் கண்ணைப் பார்த்தால், எனது உருவம்தானே அங்கே காணப்படுகிறது" என்று கூறி விளக்கியதாகவும் அறிவித்தார்.

**பின்பு திரு லேனாட் கற்றர்** ***(Mr. Leonard Gutter, Argentina)*** உரை நிகழ்த்தினர். எமக்கு 3 அதிஷ்டங்கள்.

1. மனிதப் பிறவி
2. அவதாரத்தின் காலத்தில் வாழ்தல்.
3. இளம் வயதிலேயே சாயி அடியாராகியது.

உங்களை அவர்தான் இங்கு கொண்டுவந்துள்ளார். உங்கள் எல்லோருக்கும் பணியுண்டு. இம்மகாநாட்டின் குறிக்கோள்கள் தக்க தகவல்கள் பரிமாறுவது, ஆன்மீக வழியில் ஊக்கமளிப்பது, நம்பிக்கையையும் அறிவையும் பெருக்குவதுமாகும். சுவாமி எப்பொழுதும் எம்முடன் இருக்கிறார் என்ற உணர்வு இடைவிடாது இருக்க வேண்டும். எல்லோரும் சத்தியம் செய்யுங்கள்.

"இன்று முதல் ஒருவரையும் குறையாக விமர்சிக்க மாட்டேன்.
ஒருவரைப் பற்றிக் கூடாததைக் கேட்க மாட்டேன்."

உங்களின் இனிய அனுபவத்தை நாடுகளுக்குத் திரும்பியதும் மற்றையோர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள், என்று கூறி முடித்தார்.

**பின்பு திரு சிறீறங்கராஜன் (சத்திய சாயி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்)** உரை நிகழ்த்தினார்.

அவதாரம் நாம் எப்படி வாழவேண்டுமென்று காட்டுகிறார். இயேசுநாதர், சீடர்களின் கால்களைக் கழுவி தனது அன்பைக் காட்டினார். கடவுள் மீது அன்பு வைத்தால் பாபம் செய்யப் பயமேற்படும். உள் அனுபவங்கள் சேவை மூலம் அடைய சங்கநீதி நிலவும். சுவாமியின் மீது எமக்கு அளவிலா அன்பு என்று சொல்வதற்கு, எது அளவுகோல். மற்றையவர்களில் எவ்வளவு அன்பு செலுத்துகிறோம் என்பது தான் அளவுகோல் என்று கூறி முடித்தார். இதன் பின்பு வினா விடை நிகழ்வு நடைபெற்றது.

பிற்பகல் சுவாமியின் தரிசணத்தின் பின்பு உரைகள் நிகழ்ந்தன. முதலில் **குறோசியா** ***(Croatia)*** நாட்டைச் சேர்ந்த திரு **ஐவன்** ***(Ivon)*** உரை நிகழ்த்தினார். இம் மகாநாட்டின் மகிமையை ஆத்மாதான் அறியும். சிறு வயதிலே கடவுள் நம்பிக்கையில்லாவிட்டாலும், தனது பாட்டியை பாபா பாபா (அவர்களின் மொழியில் பாபா என்றால் பாட்டி) என்று அழைத்தான் பயனோ என்னவோ பாபாவிடம் வந்தேன். நாம் தெய்வீகமான வாழ்வு வாழவேண்டுமென்று கூறி முடித்தார்.

**பின்பு** ***Dr.*** **ஷோன் செற்றி** ***(Dr. Shaun Setty USA)*** அமெரிக்காவில் சிறு பிள்ளை அறுவை சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றுகிறார்.) உரை நிகழ்த்தினார். சுவாமி தனது இளவயதில் தனது பணியைப் பற்றித் தமையனாருக்கு எழுதிய கடிதத்தை மேற்கோள் காட்டினார். சில வருடங்களுக்குப் பின்பு பயிற்சி மூலம் தான், சுவாமி கொடுத்த மோதிரத்தில் சுவாமியைக் காண முடிந்தது என்று கூறி முடித்தார்.

பின்பு **திருமதி சைதனா ராஜு** சிறிய உரை நிகழ்த்தினார்.
சுவாமியின் அன்பைத் தான் எவ்வாறு அனுபவிக்கிறார் என்று கூறிமுடித்தார்.

28ம் திகதியன்று காலை சுவாமியின் தரிசனத்தின் பின் மகாநாட்டின் நிறைவு நாள் நிகழ்வு ஆரம்பமாகியது. **திருமதி றீற்றா சுதாசாமா** *(U,K)* உரை நிகழ்த்தினார். தனது இரண்டாவது பிரசவத்தின்

போது சுவாமி எவ்வாறு உதவி செய்து பிள்ளையையும் தன்னையும் காப்பாற்றினார் என்று கூறினார். சுவாமிக்காக எம்மை அர்ப்பணித்தால் எமது தேவைகளை அவர் கவனித்துக் கொள்வார் என்று கூறி முடித்தார்.

**பின்பு திரு சஞ்ஜே மகாலிங்கம் (சத்திய சாயி பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளர்)** உரை நிகழ்த்தினார். இறைவனை அணுகாமல் நாம் பூரணத்துவம் எய்தமுடியாது. இன்று உலகுக்கு ஒழுக்கம் தூய்மை நிறைந்த மானிடர்களே தேவை. எனக்கு நீங்கள் தான் தேவை என்று சுவாமி கூறியதை நினைவூட்டினார். ஒரு இலக்கண சாயி இளைஞர், ஆதி சங்கரின் தலையுடனும், புத்த பெருமானின் இதயத்துடனும், ஜனக அரசனின் கைகளும் கொண்டவராக இருத்தல் வேண்டும். உலகம் உன்னுக்குள் போகாத முறையில் உலகில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். உடலையும், மனதையும் எடுத்துவிட்டால் எஞ்சியிருப்பது இறைவனுக்குரிய நானே. மனதை வெல்லுவதற்கு இறைஅருள் தேவை. சுவாமியுடன் ஒன்றுவதே சுவாமியின் வேலையைச் செய்வதாகும் என்று கூறி முடித்தார்.

**திருமதி பிலிஸ் கிறிஸ்டல் உரை நிகழ்த்தினர்.** (2வது தடவையாக)

எங்கள் ஒவ்வொருள்ளும் அவர் இருக்கிறார். பகவானின் அன்பு எங்கள் மூலமாக மற்றையோருக்குச் செல்லவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். அப்போதுதான் நாம் அவரின் தூதுவர்களாவோம். சுவாமி, எங்களை எல்லாக் குறைகளுடன் ஏற்றுக் கொள்கிறார். நாமும் இதனைக் கையாளவேண்டும். ஒரு முறை நாம் பயணம் செய்த விமானம் கடத்தப்பட்ட பொழுது, நான் என்ன செய்யலாம் என்று பிரார்த்தித்த பொழுது கடத்தல் காரர்களுக்கு அன்பைச் செலுத்த வேண்டுமென்ற பதில் வந்தது. அதற்கும் அவரையே வேண்டி அன்பு செலுத்தத் தொடங்கியதும் நிலைமை சுமுகமாக மாறியது. சுவாமியின் அன்பை எல்லோருக்கும் பகிர வேண்டும். இதயத்தைத் திறந்து அவரின் அன்பை வேண்டுங்கள் என்று கூறி முடித்தார்.

**திரு டிமித்றோ** *(Russia)* ருஷ்ய மொழியில் பேச ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

நாம் ஆயிரம் மைல்களுக்கப்பாலும் சுவாமியின் அன்பினால் மிகவும் சுகமாக இருக்கின்றோம். சுவாமி எங்குமுள்ளார். அவரின் போதனைகளைக் கடைப் பிடிப்போம் என்று கூறி முடித்தார்.

**பேராசிரியர் அனில் குமார் உரை நிகழ்த்தினார் :-**

மனிதன் சந்திரனில் நடப்பது எமக்கு முக்கியமல்ல. ஆண்டவன் எம் மத்தியில் நடப்பதுதான் முக்கியம். புத்தியிலும் பார்க்க புத்திக்கூர்மை மேலானது. சமயத்திலும் பார்க்க சமயப் பண்புமேலானது. பதவியிலும் பார்க்க பொறுப்பு மேலானது. செயலிலும் பார்க்க அதுவாக இருப்பதே மேலானது. கடவுளிடம் போட்டியோ, ஒத்துப் பார்த்தலோ கிடையாது. நான் என்னையோ, எனது குடும்பத்தையோ நேசிப்பதிலும் பார்க்க சாயி நிறுவனத்தையே நேசிக்கிறேன் என்று சொல்லி முடித்தார்.

**பின்பு** *Dr.* **நரேந்திர ரெட்டி** *(Dr.Narendra Reddy USA)* உரை நிகழ்த்தினார்.

எவ்வளவோ இளைஞர்கள் மத்தியில் இங்கிருப்போர்களே சுவாமியால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எமக்குக் கிடைத்த 3 ஆசீர்வாதங்களாவன :-

1. மனிதப் பிறவி
2. கடவுளைக் கண்டு அவரை வணங்குவது
3. கடவுளே குருவாக எமக்கு அமைந்தது

இராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அபேதானந்தா பகவான் அவதாரம் தான். அதில் ஐயமில்லை என்று சொன்னதைச் சுட்டிக் காட்டினார். பகவானை அலசி ஆராய்வதில் பயனில்லை. அவருடைய அன்பை அனுபவிப்பதே மேன்மையானதாகும். சுவாமி தனது போதனைகளை கெட்டியாகக் கடைப்பிடித்தலே போதுமானது என்று சொல்லியுள்ளார். எல்லாம் கடவுளின் வேலையென்ற மனப்பாங்கில் செயற்படவேண்டுமென்று கூறி முடித்தார்.

**இறுதியாக மைக்கல் கோல்ட்ஸ்ரைன்** *(Dr.Michael Goldstein)* உரை நிகழ்த்தினர். சுவாமி எங்களில் மனமாற்றத்தை ஏற்படுத்தி வழிநடத்துகிறார். சுவாமி எம்மை பிரேம ஸ்வருபலா என்று அழைப்பதன் அர்த்தத்தை அங்கிருக்கும் இளைஞர்களின் முகத்தைப் பார்த்தது விளங்கிக் கொண்டதாகக் கூறினார். சுவாமி தனக்குத் தந்த மந்திரம் "கடவுள் தான்" *(God is)* என்று சொன்னார். சுவாமி தனக்குப் பிடித்தமான முறையிலே எங்களை மகிழ்விக்க வேண்டுமென்று பிரார்த்தித்து தனது உரையை நிறைவு செய்தார்.

சுவாமி எழும்ப முயற்சித்ததும் கரகோஷம் எழுந்தது. சுவாமி தனது அருளுரையைத் தொடங்கினார்.

**அருளுரையிலிருந்து சில கூற்றுக்கள் :-**

சத்தியத்திலிருந்தே இந்தப் பிரபஞ்சம் எழுந்தது. சத்தியத்திலேயே திரும்பவும் சங்கமமாகும் என்று சொல்லி ஒருஅழகான நீள்வட்டவடிவில் தங்க இலிங்கம் ஒன்றைத் சிருஷ்டித்து எல்லோருக்கும் உயர்த்திக் காட்டினார். தர்மம் சத்தியத்தின் பரிணமிப்பேயாகும். மனிதன் தெய்வமானவன். நீங்கள் தெய்வம் என்று நினைத்து, மற்றயவர்களில் தெய்வத்தைக் காணுங்கள். 'நான் நானே தான்' *(I am I)* என்ற தத்துவத்தை மறக்கக் கூடாது. உங்களை முதலில் அன்பினால் நிரப்பினால்தான் மற்றையோருக்கு அன்பைப் பகிர முடியும். கடவுள் தான் நாயகன் *(Hero)* மற்றையோர் எல்லாம் சூனியங்களே *(Zero)* இவர்கள் கடவுளுடன் சேரும் பொழுதே மதிப்புப் பெறுகிறது. நல்லோரின் சேர்க்கை அவசியம். மனதை 11 செக்கனுக்கு ஒரு நிலைப் படுத்தினாலே, கடவுளைக் காணலாம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சுவாமியை நினையுங்கள். நான் பிரசன்னமாகி உங்களுடன் கதைப்பேன். 11 விநாடிகள் மன ஒருமையில் இருந்தால் போதும். உணவை உரிய நேரத்தில் உண்ண வேண்டும். அசைவ உணவைத் தவிர்க்க வேண்டும். பாற்கட்டியையும் *(Cheese)* தவிர்க்க வேண்டும். பாலை அரைக்கரைவாசி நீருடன் கலந்தே பருகவேண்டும். தயிரும் அளவுக்கு மிஞ்சிக் கூடாது. மனக்கவலை, அவசரம், வாசனைத்திரவியம் கூடிய கறிகளே இதய வருத்தத்திற்குக் காரணம். *(Worry Hurry & Curry)* எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எனது இடுப்பெலும்பு உடைந்தபோது வைத்தியர்கள் தனதுடம்பைச் சோதிக்க ஐந்து நிமிடங்கள் தரும்படி கேட்டார்கள். நான் சொன்னேன்:- "ஆன்மீகத் தேவைக்கு 5 மணித்தியாலமும் தருவேன் எனது உடம்புக்காக 5 நிமிடமும் தரமாட்டேன். நாளைக்கு நடந்து தரிசனம் தர ஆவலாக உள்ளேன். உங்களின் பக்தியே எனக்கு மருந்து. எனது அன்பு மிகவும் சக்தி வாய்ந்த மருந்து. சிறு பிரச்சினைகளால் வேறுபடாது ஒரே குடும்பமாக மகிழ்ச்சியுடன் வாழுங்கள். சிவராத்திரிக்கு இதிலும் பார்க்கப் பெரிய இலிங்கம் வெளிப்படும் என்று சொல்லி அருளுரையை முடித்தார். பின்பு சர்வதேசக் குழுவினரின் இசை நிகழ்வு நடந்தது. 9 மொழிகளில் பாடினார்கள். 29 ஆம் திகதி குருபூர்ணிமா நிகழ்வு நடைபெற்றது. மாலை சுவாமியின் தரிசனத்திற்குப் பின்பு சர்வதேசக் குழுவினரின் *(International Choir)* இசை நிகழ்வு நடந்தது. 46 நாடுகளிலிருந்து 170 நபர்கள் பங்கு பற்றினார்கள்.

30ஆம் திகதி சுவாமியின் மாலைநேர தரிசனத்திற்குப் பின்பு குரோசியா *(Croatia)* நாட்டவரின் இசை நிகழ்வுடன், ஸ்ரீலங்காவின் இரு நாடகங்களும் நடைபெற்றன. நாடகத்தில் பங்கு பற்றிய யாழ்.மாவட்ட யுவதிகள் ஒவ்வொருவருக்கும் பகவான் சேலை கொடுத்து மகிழ்வித்தார்.

மகாநாட்டையொட்டி அங்கு சென்ற போது எமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் சுருக்கம்.

**முயற்சியும் ஆண்டவன் அருளும்.**

புட்டபர்த்திக்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் எழுந்து தீவிர ஆவலாக மாறி முயற்சியில் இறங்கத் தூண்டியது. இத்துடன் இளைஞர்கள் சாதனையிலும் ஈடுபட்டார்கள். யாழ் இளைஞர்களுக்கு பாதுகாப்புப் படையினரின் அனுமதி, பிரயாண கடவுச் சீட்டு, கொழும்புக்குப் பயணவசதி, கொழும்பில் பாதுகாப்பாகத் தங்க வசதி, இந்தியா நுழைய அனுமதி, உணவு, பொருள் வசதிகள் எல்லாம் தக்க நேரத்தில் கிடைத்தன. புறப்படும் ஆயத்தங்கள் செய்யும் பொழுது தடங்கல்கள், சந்தேகங்கள் எழுந்தாலும், சுவாமியின் தரிசன ஆவல் இருந்தால் எல்லாம் மறைந்தன.

"என்னை நோக்கி ஒரு அடி எடுத்துவை
நான் பத்து அல்லது நூறு அடியும் எடுத்துவைப்பேன்".
"புட்டபர்த்தி வந்து எனது தரிசனத்ததை
எனது சங்கல்பமின்றி ஒருவரும் பெற முடியாது".
என்ற சுவாமியின் இரு கூற்றுக்களும் அனுபவமாகின.

**சோதனைகள் தான் எனது சுவை** *(Test is my taste).*

பிரசாந்தி நிலையத்தில் எத்தனை நெரிசல்கள், வசதியின்மைகள் முதலில் பெரிதாகத் தென்பட்டாலும், சுவாமியின் மீதிருந்த நம்பிக்கையாலும், அவரின் அன்பினாலும் கஷ்டங்களெல்லாம் மறைந்தன.

**ஒழுங்கு கட்டுப்பாடு :** பிரசாந்தி நிலையத்தில் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்கு முதலிடம் கொடுக்கப் படுகிறது. நிர்வாகிகள் அங்கு விதிக்கப்பட்ட விதிகளை 100 வீதம் கடைப்பிடிப்பார்கள். சுவாமியின் கட்டளை தான் வேலை செய்யும். செல்வாக்கினாலோ அறிமுகத்தாலோ விதிகளை மாற்ற முடியாது.

**நிச்சயமற்ற தன்மையை ஏற்றுக் கொள்ளல்:** எது எவ்விதம் நடந்தாலும், நம்பிக்கை தளராது ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதைப் படிப்பித்தார். தரிசனம் எந்நேரம், எதில் எப்படி வருவார், எத்திசை திரும்புவார், எங்கு பார்ப்பார், யாரிடமிருந்து கடிதம் வாங்குவார், யாருடன் கதைப்பார், யாரை நேர்காணலுக்கு அழைப்பார், எப்பொது ஆரார்த்தியை ஏற்றுக்கொள்வார் என்பனவற்றை முன்கூட்டி ஒருவரும் அறிய முடியாது. ஊகிக்கவும் முடியாது. நிர்வாகிகள் எவ்வளவு முக்கியமானவர்களாயினும், முக்கிய காரியமாகிலும், சுவாமியின் சைகையின்றி எழும்ப முடியாது. நிகழ்ச்சிகள் முன்னர் ஏற்கப்பட்டிருந்தாலும் பின்னர் இரத்துச் செய்யப்படலாம், அல்லது மாற்றப்படலாம். வேண்டுகோளை அவரிடம் இதய பூர்வமாகச் சமர்ப்பித்துவிட்டுப் பொறுமையாக, எதிர்பார்ப்புகளின்றி மௌனமாக இருக்க வேண்டுமென்பதைக் கற்றோம்.

எமது நாடகங்கள் ஏற்கப்படுமென்று கடைசிநாள் கடைசி நிமிடம் வரை தெரியாது. அகங்காரம், தற்பெருமை அடங்கி, சரணாகதியடைந்ததும், நாடகம் அனுமதிக்கப்பட்டது. நாடகம் தரமானது என்று பலத்த கரகோஷத்தாலும், வாய் மூலமும் தெரிவித்தார்கள். சுவாமியும் தனது அன்பைச் சொரிந்தார். எங்களுக்குப் பக்தியும் நம்பிக்கையும் கூடியது.

**தரிசனத்தில் முக்கியத்துவம் :-**

பிரசாந்தி நிலையத்திற்குப் போகும் ஒரே நோக்கு சுவாமியின் தரிசனம் என்றே இருக்கவேண்டும். வேறு நோக்குகள் இருந்தால் தரிசனமும் தடைப்படும். நாடகம், இசை நிகழ்ச்சி நடத்துவது முக்கியமல்ல. சுவாமியின் தரிசனமே முக்கியமென்ற பாடத்தைப் படிப்பித்தார். தரிசனத்திற்கு விலை மதிப்பில்லை. கோடானு கோடி செலவழிந்தாலும் தரிசனம் கிடைத்தாலே போதும். அந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

மகாநாடு முடிந்ததும் சிலர் அவசரப்பட்டுக் கிளம்பிவிட்டார்கள். அங்கு பொறுமையுடன் தரிசனத்திற்காக நின்ற இளைஞர்களுக்கு 31ம் திகதி சுவாமி தான் அணிந்த அங்கிகளைக் கொடுத்து மகிழ்வித்தார். இதைப் போல் அதிஷ்டம் கிட்டுமா?

இளைஞர்களுக்கு அறைவசதி இலவச உணவு வசதி, மண்டபத்தில் இருக்கை வசதி, சகலதும் அளித்தார். இம் மகாநாட்டையொட்டி, கண்காட்சிகள் இரண்டு நடந்தன. நூல் வெளியீடும் நடந்தது. அநேகமாக ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு பிரசாதம் வழங்கப்பட்டது.

*இலங்கை சாயி இளைஞர் - சாயி அன்பின் தூதுவர்கள்.*

*நாம் சாயியாவோம்.*

*ஜெய் சாயிராம்.*

**ஆசிரியர்.**
**07.08.2007**

# சேவைச் செய்திகள்

## வடபிராந்தியம்

சித்திரைப் புத்தாண்டையொட்டி 11/04/2007 அன்று யாழ். சிறைச்சாலையில் பஜனை செய்ததுடன் பிஸ்கட், வாழைப்பழம், பால்மா, சீனி, தேயிலை என்பன வழங்கப்பட்டன.

12/04/2007 அன்று அராலி கிராம மக்களுடன் பஜனை நிகழ்வு ஒன்று நடாத்தியதுடன் லட்டு, வாழைப்பழம் என்பன வழங்கப்பட்டது.

13/04/2007 வசாவிளான் பகுதியில் மிகவும் பின்தங்கிய சுந்தரபுரம் கிராமத்தில் சுமார் 300 மக்களுடன் பஜனை நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டது. பிரசாதமாக 500 லட்டு வழங்கப்பட்டது. அத்துடன் அங்கிருந்த எல்லாக் குடும்பங்களுக்கும் புத்தாடையும், புதிய படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன. பெண்களுக்கு தையற் பயிற்சி வகுப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஆசிரியை ஒருவர் அந்தக் கிராமத்திலேயே தெரிவு செய்து மாதம் ரூபா 3000/- வேதனமாக வழங்கப்படுவதுடன், 2 தையல் இயந்திரங்களும் 40 மீற்றர் துணியும் வழங்கப்பட்டன. இவற்றை யாழ்.நிலையம் வழங்கியது. மானிப்பாய் நிலையம் புதிய ஆடைகள், உலர் உணவு என்பன வழங்கியதுடன் சிலருக்கு பண உதவியும் செய்யப்பட்டது. நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அலுமாரி ஒன்று வழங்கி நூல்கள் சிலவும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. 15/04/2007 அன்று புங்குடுதீவுப் பகுதியில் மருத்துவ சேவை ஒன்று நடாத்தப்பட்டது. முதலில் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து, 465 நோயாளிகள் பார்வையிடப்பட்டனர். 7 வைத்தியர்கள் இச்சேவையில் ஈடுபட்டனர். 150 பிள்ளைகளுக்கு கொப்பிகள், லட்டு என்பன வழங்கப்பட்டன. 19/05/2007 அன்று நவக்கீரி வசாவிளான் பகுதியில் மக்கள் சந்திப்பு நிகழ்வு ஒன்று நடாத்தப்பட்டது. 190 நோயாளிகள் பார்வையிடப்பட்டனர். 180 மாணவர்களுக்கு கொப்பிகள் வழங்கப்பட்டன. கோப்பாய் நிலையத்தால் வறுமை நிலையிலுள்ள 6 குடும்பங்கள் இனம்காணப்பட்டு ரூபா 2500/- வீதம் பணஉதவி வழங்கப்பட்டது.

மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று அவர்களுடன் இணைந்து எல்லோருக்கும் பொதுவான முறையில் பிரார்த்தனை நிகழ்வுகளை நடாத்தி அவர்களின் அவசர தேவைகளைக் கண்டறிந்து உதவிகள் செய்வதன் மூலம் சாயி சேவா பரந்த அளவில் நடைபெற்றுவருகிறது. மிகவும் கஸ்டமான இன்றைய சூழ்நிலையில் இப்படியான சேவைகள் பெரும் வரவேற்பைக் பெறுகின்றது.

24/07/2007 அங்கவீனர் தினம் தொடர்பாக சேவை இணைப்பாளர் சேவைகளை வலியுறுத்தி எல்லா நிலையங்களுக்கும் ஒரு துண்டுப்பிரசுரம் அனுப்பிவைத்தார். அதன்படி எல்லா நிலையங்களும் தமது சுற்றாடலில் இருக்கும் அங்கவீனர்களைத் தேடிக்கண்டுபிடித்து உதவிகள் செய்ததாக அறியக்கூடியதாக உள்ளது. விரிவான அறிக்கைகள் கிடைக்கவில்லை.

யூலை மாதம் 20ந் திகதி முதல் 30ம் திகதி வரை சேவை வாரம் ஒன்றை அனுசரிக்கும்படி சேவை இணைப்பாளர் ஒரு சுற்றுநிரூபம் வடபிராந்தியத்தின் எல்லா நிலையங்களுக்கும் அனுப்பியிருந்தார். 21/07/2007 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு எல்லா நிலையங்களிலும் ஒரே நேரத்தில் நாட்டில் அமைதி வேண்டி ஒரு பிரார்த்தனை நிகழ்ச்சியை நடாத்துமாறு கேட்டிருந்தார். இதன்படி அனேகமான நிலையங்கள் பிரார்த்தனை நிகழ்ச்சியை நடாத்தின என்பதை அறியக்கூடியதாக உள்ளது. பக்தர்கள் பெருமளவில் கூடியது அவர்களின் உள்ளுணர்வின் வெளிப்பாடாகக் கருதலாம். எல்லா நிலையங்களிலும் அவர்களின் சக்திக்கு ஏற்றவாறு சேவையில் ஈடுபட்டனர். வடபிராந்திய ஆன்மீக இணைப்பாளர் 20.05.2007 அன்று ஜோதி தியான செய்முறைப் பயிற்சி ஒன்றை நடத்தினார். அன்று ஜோதிதியானம் பற்றிய ஒரு கை நூல் வெளியிடப்பட்டது. அன்று இலவசமாக வழங்கப்பட்ட இந்நூல் இப்பொழுது நிலையங்களில் விற்பனைக்கு உள்ளது. விலை ரூபா 40/-. பாலவிகாஷ் கண்காட்சி ஒன்று வடபிராந்திய ரீதியில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ஆயத்த வேலைகளை உபகுழு ஒன்று மேற்கொண்டு வருகிறது.

**ஏனைய பிராந்தியங்களுக்கான செய்திகள் கிடைக்கவில்லை.**

# சேவைக்கு பகவானின் அற்புதங்கள் சில....

பகவான் சேவைத்திட்டங்களையும், உள்ளன்போடு செய்யும் கருமங்களையும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார். ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார். சேவையின் போது நடைபெற்ற சில சம்பவங்களை இங்கே குறிப்பிடுகின்றோம்.

1) வடபிராந்தியத்தில் நடைபெறும் சேவைச் செய்திகளை வடபிராந்திய சேவை இணைப்பாளர் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு வருகிறார். இதுவரை சுமார் 20,000 பிரசுரங்கள் வரை பிரார்த்தனைகள், சேவைத்திட்டங்கள் பற்றி பிரசுரித்து வெளியிட்டு வந்துள்ளார். அச்சுக்கூடத்திலும் பணத்தை கேட்பதில்லை. ஒருநாள் அச்சுக்கூடத்திலிருந்து ரூபா 65,000/- க்கான ஒரு சிட்டையும் "பணத்தை தந்தால் எமக்கு உதவியாக இருக்கும்" என்று ஒரு சிறு குறிப்பும் இருந்தது. பணத்தை எப்படிச் செலுத்துவது என்ற சிந்தனை. தன்னுடைய பிள்ளைகளைப் புட்டபர்த்திக்கு அனுப்ப இருந்த பணம் ரூபா 60,000/- இப் பணத்தை வங்கியில் இட்டு வருகிறேன் என்று சொல்லி பணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அப்போது அவரது மகள் கையில் பணத்துடன் ஓடி வந்து "பணத்தை எடுக்காமல் போகிறீர்களே!" என்று கேட்டபடி ரூபா 60,000/- ஐ கொடுத்தார். சேவை இணைப்பாளருக்கு ஆச்சரியம். தனது மேசையில் இருந்த பணம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. யாராவது தந்த பணத்தை வைத்துவிட்டு மறந்துவிட்டேனா? என்று சிந்தித்துப்பார்த்தார். தெரியவில்லை. ஆயினும் தற்போது அச்சுக்கூட பிரச்சினையை முடித்துவிடுவோம் என்று கூறிக்கொண்டு அச்சுக் கூடத்திற்குச் சென்றார். அங்கு அச்சுக்கூட உரிமையாளர் ரூபா 65,000/- சிட்டையில் ரூபா 5000/- கழிவு என்று கழித்துவிட்டு ரூபா 60,000/- ஐ போட்டு வைத்துக் கொண்டிருந்தார். வந்த பணமும் சிட்டையும் சரியாக இருந்தது. ரூபா 60,000/- எப்படி அவரின் மேசைக்கு வந்தது. விசாரித்து வருகிறார். புரியவில்லை. பகவான் ஊக்குவிக்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

2) ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி நபிகள் நாயகம் அவதரித்த தினம். யாழ்.மத்திய நிலையத்தில் பஜனையுடன் ஒரு மௌலவியையும் அழைத்து சொற்பொழிவாற்ற எண்ணி முயற்சித்தார்கள். அது கைகூடவில்லை. பஜனை மட்டும் நிகழ்த்தி முடிப்போம் என்று எண்ணி பஜனையை நடாத்தினார்கள். கடைசி சர்வதர்மப் பாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இரண்டு மௌலவிகள் நிலைய வாசலில் வந்து நின்றார்கள், மிகச் சரியான நேரத்தில் அவர்கள் யாரின் அழைப்பின் பேரில் வந்தார்கள்? புரியவில்லை. மௌலவிகளை சொற்பொழிவாற்றவைத்து பக்தர்களின் விருப்பத்தை பகவான் நிறைவேற்றி வைத்தார். ஊரடங்கு நேரம் 6 மணியாக இருந்தும் 5.30 மணிக்குமுன் அவர்களை பேசச் செய்து நிகழ்ச்சியை பூரணப்படுத்தி எல்லோரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திவிட்டார்.

3) தாவடி நிலைய பாலவிகாஷ் மாணவர்களில் வறிய மாணவர்களுக்கு கல்விக்காக ஊக்குவிப்புப் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. கொடுக்க வேண்டுமென மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானித்த அன்று மாலை அச்சுவேலியில் இருக்கும் ஒரு அன்பர் தான் ஒருவருடமாக உண்டியல் மூலம் நேர்த்திக்காக தினசரி பணம்போட்டு சேகரித்த பணம் ரூபா 6051.50 சதம் பிள்ளைகளின் கல்விச் சேவைக்காக செலவு செய்யும்படி ஒருவர் மூலம் கொடுத்து அனுப்பினார். மே மாதம் ஊக்குவிப்புப் பணம் கொடுக்கும் தினத்தில் மேலும் 3 பிள்ளைகளின் பெற்றோர், தமது பிள்ளைகளுக்கும் படிப்புக்காக பணம்

வழங்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். மேலதிக பணத்தை எப்படி பெறுவது என்ற சிந்தனை நிர்வாகிகளுக்கு. அப்போது தொலைபேசி மணி அடித்தது. வெளிநாடு ஒன்றிலிருந்து நிலையத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் பேசினார். வறிய பிள்ளைகள் சிலரின் கல்விக்காக தான் ஒரு தொகை பணம் தருவதாகவும் தகுதியானவர்களைத் தெரிவு செய்து வழங்கும்படியும் கூறினார். மிகச் சரியான நேரத்தில் வெளிநாடு ஒன்றிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்ளச் செய்தவர் யார்? சேவைகளை பகவான் ஊக்குவிக்கிறார்.

4) இது ஒரு சின்ன விடயம். ஆனாலும் பகவான் சின்ன விடயங்களிலும் எவ்வளவு கவனமாக இருக்கிறார் என்பதற்கு ஒரு சாம்பிள்.

பௌர்ணமி தினங்களில் யாழ்.நிலையத்தில் நாராயண சேவை நடைபெற்று வருகிறது. ஆடிப் பௌர்ணமியன்று நாராயண சேவை. முதல்நாள் மாலை 6 மணிக்கு நிலையம் பூட்டும் நேரத்தில் சேவை இணைப்பாளரிடம் மகளிர் பகுதிப் பொறுப்பாளர் ஒருவர் கூறினார். ''கறி சுவையாக இருக்க நாளை வரும் போது றம்பை இலை வாங்கி வாருங்கள்'' என்று. அவரும் ''ஆம்'' என்று கூறிவிட்டு சென்றார். அடுத்த நாள் காலை சிறுது நேரமாகிவிட்டது. றம்பை இலை வாங்க சந்தைக்குள் சென்றால் நேரம் போய்விடும். அத்துடன் றம்பை இலை ஒரு அவசியமான பொருள் அல்ல என்றும் நினைத்தவாறு நிலையத்தை நோக்கி வந்தார். நிலையத்திற்குச் சமீபமாக ஒரு பையன் தாயையும் ஏற்றிக்கொண்டு சைக்கிளில் வந்து அவரின் பக்கமாக வந்து ''ரம்பை இலை வேணுமா?'' என்று கேட்டான். அப்போதுதான் சுவாமியின் ஏற்பாடு எப்படிப்பட்டது என்று வியந்து பணம் கொடுத்து றம்பை இலையை வாங்கி நாராயண சேவையில் சேர்த்துவிட்டார். சின்ன விடயம் சிந்திக்க அநேகம்.

5) வசாவிளான் சுந்தரபுர மக்கள் சிலருக்கு குடிசைகள் அமைக்க கிடுகுகள் தருவதாக கூறியிருந்தார் சேவை இணைப்பாளர். பல இடங்களிலும் விசாரித்துப் பார்த்ததில் விலை அதிகமாக இருந்தது. ஓர் இளைஞர் கூறினார் இன்னும் மலிவான விலையில் தான் ஒழுங்கு பண்ணுவதாகக் கூறிச் சென்றார். மூன்று தினங்கள் களித்து அந்த இளைஞர் போன் செய்தார். தான் கிடுகு வண்டி ஒன்றை மலிவான விலையில் ஒழுங்கு செய்து இணுவில் சந்தியில் நிற்பதாகவும் உடனடியாக ரூபா 15,000/- த்துடன் அங்கு வரும்படியும் கூறினார். சேவை இணைப்பாளரிடம் பணம் இல்லை. யாரிடமாவது கடன் வாங்கியாவது உடனே போகவேண்டுமே! என்ற எண்ணத்துடன் உப.தலைவருக்கு போன் எடுத்து ரூபா 15,000/- கடன் தரும்படியும் கிடுகுவாங்க அவசரம் தேவையென்றும் கூறினார். அப்போது உப தலைவர் கூறினார் இப்போது தானே எமது நிலைய உறுப்பினர்......... வந்து ரூபா 15,000/- தந்து கிடுகு வாங்க செலவு செய்யுங்கோ என்று தந்துவிட்டுப் போகிறாரே என்று ஆச்சரியத்துடன் ''கடன் இல்லை கிடுகுக்குரிய பணத்தையே வந்து பெற்றுச் செல்லுங்கள்'' என்று கூறினார். தேவை அறிந்து பணத்தை ஒழுங்குசெய்துவிட்டு சரியான ஆளிடம் சரியான நேரத்தில் போன் செய்ய வைத்தது இச் சேவையை பலமடங்கு உற்சாகத்துடன் செய்ய வைக்க பாபா கொடுத்த ஊக்க மருந்து.

இன்னும் எவ்வளவோ அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. எழுதி அனுப்புங்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளலாம்.

# "சாயி கீதா" காலமாகிவிட்டது



பகவானின் அன்புக்குப் பாத்திர மாகி, பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும் எல்லா விழாக் களிலும் முன்னணி வகித்துவந்த சாயிகீதா என்ற யானை 22 மே 2007 அன்று மாலை 6 மணியள வில் காலமாகிவிட்டது. குளிக் கும் குளத்தில் கால் தடுக்கி விழுந்து சேற்றில் புதையுண்டு விட்டது.

பட்டு ஆடைகளுடன் பொன் நிறமான ஆபரணங்களை அணிந்து பகவானின் ஊர்வலங் களில் வரும் காட்சி கண்கொள் ளாக்காட்சியாகும். மே 23ம் திகதி காலை 8 மணியளவில் பகவான் நேரடியாகச் சென்று அதன் துதிக்கையிலும், கண்களிலும் விபூதி பூசிவிட்டதுடன், அதன் துதிக்கைகளைக் கடைசி முறை யாகத் தட்டிக் கொடுத்து விடை கொடுத்தார். அத்துடன், அதன் பாகனான ஸ்ரீ பெடி ரெட்டி என்பவருக்கு பலவித ஒழுங்கு முறைகளைப் பற்றி கூறிவிட்டு மந்திருக்குத் திரும்பினார்.

குருபூரணை அன்று மமசத்திய கீதாபுடு என்ற குட்டியானை புதிதாக அறிமுகமாகி பகவானின் ஊர்வலத்திற்கு முன்னணி வகித்தது.

# இளைஞர்களே!!!

‘‘தேசத்தில் நன்மை ஏற்பட, மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான சரியான நபர்கள் இளைஞர்களேயாவர். இளைஞர்களிடம் உள்ள உடலின் வலிமை, புலன்களின் தெளிவு, மற்றும் புத்தியின் கூர்மை ஆகியன சமுதாயத்தின் ஏனைய மக்களிடையே காணுதல் இயலாது. அவர்கள் உறுதியான சபதம் எடுத்துக் கொண்டால், அவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. இளைஞர்கள் தங்களது புலன்களின் வலிமை, மனதின் சக்தி, உடலின் சக்தி, புத்திக் கூர்மை மற்றும் ஆன்ம பலத்தினை இந்த சமுதாயத்திற்காக உபயோகிப்போம் என உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். தங்களின் புலன்களின் தெய்வீக சக்தியினை சேமித்து, சமுதாய நலனுக்காகப் பாடுபட வேண்டும். நாட்டைக் காத்திட வேண்டும். இதன் பிறகே உண்மையான மனிதர்கள் என அழைக்கத் தகுதி பெற்றவர்கள்’’.

13.08.2006 பகவானின் அருளுரை.
தமிழ் சனாதன சாரதி நவம்பர் 2006.